Registered as a NewsPaper

விலை ரூபா-7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

இலவசப் பிரதி



உங்கள் அனைத்துத் தேவைகளுக்கும்

R.V.பந்தல் சேவை

முல்லைச்சாலை, தருமபுரம். (சி-10163) விநாயகர் வீதி, மயிலிட்டி.

நாதம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | ஆவணி-30 | 15-09-2004 | புதன்கிழமை | ஓசை -210

## -சிங்கள மக்களிடம் உண்மைகளை எடுத்துக்கூறுங்கள்

# நாங்கள் சிங்களமக்களின் எதிரிகள் அல்ல;

# எங்கள் தேசத்தில் நிம்மதியாக வாழவே விரும்புகிறோம்!

### தென்னிலங்கை ஊடகவியலாளர் மத்தியில் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்

**நாங்கள் சிங்கள மக்களுக்கோ, சிங்கள தேசத்திற்கோ எதிரானவர்கள் அல்ல. விரோதிகள் அல்ல என்கின்ற செய்தியை நீங்கள் தெளிவாக எடுத்துச் சொல்ல வேண் டும். தமிழ் மக்கள் சுதந்திரத்தோடும், உரிமையோடும் வாழ்ந்தால் நிச்சயமாக சிங்கள தேசத்திலேயும் அது ஒரு பெரிய வளர்ச்சியைக் கொண்டு வருமென்பதுதான் யதார்த்த மானது. ஆனால் தவறான அர்த்தங்களை கற்பிக்கின்றார்கள். இவ்வாறு தென்னி லங்கை ஊடகவியலாளருடனான சந்திப்பின்போது உரையாற்றிய அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் தெரிவித்தார்.**



நேற்றுக்காலை நடந்த சந்திப்பில் மேலும் அவர் தெரிவிக்கையில். உங்கள் அனைவரையும் ஒன்றாகச் சந்திப்பதில் நாங்கள் மிகவும் மன மகிழ்ச்சி அடைகின்றோம். ஏனெனில், தெற்கிலே வாழ்கின்ற சிங்கள மக்களுக்கு உண்மையான நிலைப்பாடுகளையும். தமிழீழ விடுதலைப் புலிகளுடைய உண்மையான, நேர்மையான நிலைப்பாடுகளையும் நீங்கள் சுதந்திரமாக வந்து மக்களிடமும், பொது அமைபபுக்களிடமும், தமிழீழ விடுதலைப் புலிகளிடமும், அறிந்து சென்று அந்த மக்களுக்கு சரியான உண்மைகளைக் கூறுவீர்கள் என்ற நம்பிக்கையில் நான் பெருமகிழ்வும், நம்பிக்கையும் அடைகின்றேன். ஊடகவியலாளர் ஒருவரின் குடும்பம்

(12ஆம் பக்கம் பார்க்க)

## நோர்வே விசேட தூதர் எரிக் இன்று யாழ்.விஜயம்

யாழ்.குடாநாட்டிற்கான விஜயமொன்றை மேற்கொண்டு இன்று நோர்வேயின் சமாதானத் தூதர் எரிக் சூல்ஹெய்ம் வருகை தரவுள்ளார்.

யாழ்.பல்கலைக்கழக விவசாய பீட பொது மண்டபத்தில் காலை வேளை யாழ்.மாவட்ட பொது அமைப்புக்களின் பிரதி நிதிகளையும், புத்தி ஜீவிகளையும் அவர் சந்தித்துப் பேச்சுக்களை நடாத்தவுள்ளார்.

அதைத் தொடர்ந்து விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல் துறைத் தலைமை அலுவலகத்திற்கு விஜயம் செய்யுமவர் யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதியுடன், சந்திப்பொன்றை நடாத்தவுள்ளார்.

இதேவேளை அவர் யாழ்.மாவட்ட படைத் தலைமையினையும் சந்தித்துப் பேச்சுக்களை நடாத்தவுள்ளதாக மற்றோர் தகவல் தெரிவிக்கின்றது. மாலை இவர் கிளிநொச்சி செல்லவுள்ளதாகவும் தெரிய வருகிறது. (27)

## காவல்துறை, நீதிநிர்வாகத்துறை பொறுப்பாளர்களுடன் சந்திப்பு!

தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் பா. நடேசன் அவர்களையும், தமிழீழ நீதிநிர்வாகத்துறைப் பொறுப்பாளர் பரா அவர்களையும் நேற்று தென்னிலங்கை ஊடகவியளாளர்கள் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர். நீதி நிர்வாகப் பொறுப்பாளருடனான சந்திப்பு நண்பகல் 12.50 மணிக்கு கிளிநொச்சியில் அமைந்துள்ள நீதி நிர்வாகத்துறை நடுவப்பணியகத்தில் நடை

(12ஆம் பக்கம் பார்க்க)

காவல்துறைப் பொறுப்பாளருடன் சந்திப்பு



## இந்திய,அமெ. இராணுவ உதவிகளுக்கு தமிழர் அமைப்புக்கள் பலத்த கண்டனம்

அமெரிக்கா மற்றும் இந்தியா ஆகிய நாடுகள் சிறிலங்கா அரசிற்கு இராணுவ உதவிகள் வழங்குவது குறித்து தமிழ்த் தேசிய விழிப்புணர்வுக்கழகம் மற்றும் ச்வதேச தமிழீழ மாணவர் பேரவை என்பன கடும் ஆட்சேபனையை வெளியிட்டுள்ளன.

இலங்கையின் இனப்பிரச்சினை விவகாரத்தில் நல்லதொரு வழிகாட்டியாகச் செயற்பட்டு இறுதித்தீர்வினை ஏற்படுத்துவதற்கான அழுத்தங்களை அரசிற்கு வழங்க வேண்டிய தார்மீகப் பொறுப்புடைய இந்தியா, அமெரிக்கா ஆகிய நாடுகள்.

சமாதான முன்னெடுப்புகளுக்கு முட்டுக்கட்டையாக இருந்து சமாதான அனுசரணையாளர்களை இம்சித்தும், அவர்களது நாட்டுக் கொடிகளை எரித்தும் சமாதானத்திற்கு குந்தகம் விளைவிக்கும் பேரினவாத அரசிற்கு ஆதரவு வழங்குவதுடன் மீண்டும் ஒரு யுத்தத்திற்கு வழியமைக்கும் இராணுவரீதியான

(12ஆம் பக்கம் பார்க்க)

## தமிழீழ பெண்கள் எழுச்சிநாள் 5 நாட்கள் சிறப்பு நிகழ்ச்சிக்கு ஏற்பாடு

2 ஆம் லெப். மாலதியின் 17 ஆவது நினைவு நாளையும், தமிழீழப் பெண்கள் எழுச்சி நாளையும் முன்னிட்டு மகளிர் படையணிகள் பிரிவுகள் இணைந்து பல சிறப்பு நிகழ்வுகளை நடாத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. தமிழீழ விடுதலைப்போராட்ட வரலாற்றில் மகளிர் படையணிகளின் போரியல் வளர்ச்சியை எடுத்துக் காட்டும் ஆயுதக்கண்காட்சி, புகைப்பட ஓவியக் (12ஆம் பக்கம் பார்க்க)

## தியாகி திலீபன் நினைவு நாட்கள் இன்று எழுச்சி பூர்வமாக ஆரம்பம்

தியாகி லெப்-கேணல் திலீபனின 17ஆம் ஆண்டு நினைவு நிகழ்வுகள் இன்று தேசியக்கொடியேற்றலுடன் எழுச்சிபூர்வமாக ஆரம்பமாகவுள்ளன. இதற்கான ஏற்பாடுகள் யாவும் பூர்த்தியாகியுள்ளன.

மாவீரர் மண்டபங்கள் பொது நிறுவனங்கள், சங்கங்கள், கழகங்கள், பாடசாலைகள், விடுதலைப் புலிகளின் துறைசார் அலுவலகங்கள், என்பனவற்றில் இன்று காலை

(12ஆம் பக்கம் பார்க்க)

## கனடா பொங்கு தமிழுக்கு எதிராக சிங்கள இனவாத அமைப்பு கடிதம்

கனடாவில் நடைபெறவுள்ள பொங்குதமிழ் நிகழ்வில் தமிழர்களின் பெருமை பற்றி மட்டுமே பேசப்படும் என்று கூறப்பட்டாலும். தடைசெய்யப்பட்ட விடுதலைப் புலிகள் அமைப்பிற்குப் பணம் சேர்ப்பதற்கே இந்த நிகழ்வு நடைபெறவுள்ளதாகவும், அதனால் இந்த நிகழ்வைத் தடை செய்ய வேண்டும் என்றும் கோரி கனடிய அரசிற்கும், முக்கிய அமைச்சுக்களிற்கும் சிங்கள அமைப்பொன்றால் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

(12ஆம் பக்கம் பார்க்க)

### வீரச்சாவு

02.12.95 அன்று யாழ்.ஸ்ரான்லி வீதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடி மோதலின் போது போராளி ஒருவர் வீரச்சாவடைந்துள்ளார். லெப்.நாதன் (முத்துக்குமாரசாமி சசிக்குமார்)

(12ஆம் பக்கம் பார்க்க)

நான் நேசித்த தமிழீழ மண்ணில் வாழ்கின்ற அனைவரும் எமது உரிமையை மீட்பதற்காகப் பெரும் புரட்சிக்குத் தயாராக வேண்டும்.

லெப். கேணல் தியாகி திலீபன்



## வரி விளம்பரம்

### விற்பனைக்கு உண்டு

3 KW ஜெனரேற்றர், டீசல் எஞ் சின், யமகா 50, T.V.S மோட்டார் சைக்கில் உடன் விற்பனைக் குண்டு.

தொடர்பு:–
சுகி கிளினிக்,
155 ஆம் கட்டை, கிளிநொச்சி.

(5049)

## சிங்கள வகுப்புக்கள் புதிய பிரிவுகள் ஆரம்பம்

பிரிவு 01 : செவ்வாய், புதன், வியாழன், மாலை 5. 30 – 6. 30 வரை

ஆரம்பம் : 15. 09. 2004 பிரிவு II : சனி, ஞாயிறு தினங்களில் மாலை 4. 00–6. 00 வரை. ஆரம்பம் 18. 09. 2004 பெயர்களைப் பதிவு செய்யவும்.

பி. எஸ். ரி. தொழில்நுட்பம்
கச்சேரி அருகாமை, கிளிநொச்சி.

(5045)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது பாடசாலையின் முன்னாள் முதல்வர் திரு.வீ.இராஜகுலசிங்கம் அவர்கள் கிளி/கண்டாவளைக் கோட்ட கல்வி அலுவலராக பதவியுயர்வு பெற்றமையினையிட்டு நாம் மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம். அவருடைய கல்விப்பணி சிறக்க வாழ்த்துவதோடு, மேலும் பதவியுயர்வுகளைப் பெற்று சிறந்து விளங்க வேண்டுமெனப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

கிளி/முருகானந்த ம. வி
முரசுமோட்டை

(5104)

அதிபர், ஆசிரியர்கள்,
கல்விசாரா ஊழியர்கள்,
மாணவர்கள், கல்விச் சமூகத்தினர்

## முல்லை மாவட்ட க.தொ.கூ.சங்கங்களின் சமாசம்

### பகிரங்க ஏல(இயல) விற்பனை பற்றிய அறிவித்தல்

மு. மா. க. தொ. கூ. சங்கங்களின் சமாசத்தில் எதிர்வரும் 25. 09. 2004 அன்று பிற்பகல் 2. 00மணிக்கு துவிச்சக்கரவண்டி உதிரிப்பாகங்கள் பகிரங்க ஏலவிற்பனை செய்யப்படும் என்பதனை அறியத்தருகின்றோம். பெற விரும்புவோர் 25. 09. 2004 அன்று நேரில் வருகை தந்து பெற்றுக் கொள்ளவும்.

தலைவர்,
முல்லை மாவட்ட கடற்றொழிலாளர்
கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்,
முல்லைத்தீவு.

(சி.9195)

## வவுனியா ஒப்டிகல்

**Vavuniya Optical**

கண் பரிசோதிக்கப்பட்டு
மூக்குக் கண்ணாடி 1/2 மணித்தியாலத்தில்
பெற்றுக் கொள்ளலாம்.

வவுனியா ஒப்டிகல்,
30, பஸ் நிலையம்,
வவுனியா.

*30 (Bus Stand Complex)*
*Vavuniya.*





(சி-10334)

உங்கள் வைத்திய துண்டுகளுக்கும்
உடன் கண்ணாடி வழங்கப்படும்.

## துயர் பகிர்வு

எம்முடன் தொழில் புரிந்து வந்த சுப்பிரமணியம் விமலச்சந்திரன்(றூபன்) அவர்களின் திடீர் மறைவு எம்மை மீளாத்துயரில் ஆழ்த்தியுள்ளது. அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தின் துயரில் நாமும் இணைந்து கொள்வதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனை வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

தகவல்
தொழில்சார் நண்பர்கள்

(5106)

## அந்தியேட்டி அழைப்பிதழ்



அமரர்
தெய்வமணி இளையதம்பி

அன்புடையீர்!

எதிர்வரும் 16.09.2004 அன்று எமது குடும்ப விளக்கு அமரர் தெய்வமணி இளையதம்பி அவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தனிப்பட்ட அழைப்புக் கிடைக்காதவர்கள் இவ் அறிவித்தலை தனிப்பட்ட அறிவித்தலாக ஏற்றுக் கலந்து கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

நிரந்தர முகவரி:
வேம்படி, வடமராட்சி கிழக்கு.

தற்போதைய முகவரி:
விசுவமடுச் சந்தி, விசுவமடு.

(5102)

இங்ஙனம்
குடும்பத்தினர்.

## சாவு அறிவித்தல்

### செல்வன் சங்கரப்பிள்ளை – வரதராசா



நெடுந்தீவு மேற்கினைப் பிறப்பிடமாகவும், இல.14, சிவபுரம், வவுனிக்குளத்தினை நிரந்தர வதிவிடமாகவும் கொண்டவர்களான திரு. இ. சங்கரப்பிள்ளை, அமரர் திருமதி.க.மனோன்மணி தம்பதிகளின் இளைய புதல்வன் சங்கரப்பிள்ளை வரதராசா கடந்த 12.09.2004 இல் வவுனியாவில் அகாலச் சாவடைந்துள்ளார். அன்னார் திரு.பரமேஸ்வராசா (சுவிஸ்), திரு.சுந்தரராசா (நோர்வே), திருமதி.நளாயினி (சுவிஸ்), திரு.பற்குணராசா (சுவிஸ்), திரு.தயாபரராசா (கனடா), திருமதி. கலாஜினி (சிவபுரம்), திருமதி.சிவநந்தினி (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரரும், திருமதி .சாந்தகுமாரி (சுவிஸ்), திரு.துரைராசா-தேவன் (சுவிஸ்) திருமதி. சுந்தரராசா (நோர்வே), திருமதி. மதுரா (சுவிஸ்), திருமதி. தயாபரராசா (கனடா), திரு.கு.புவனேந்திரன் (சிவபுரம்), திரு.க.வரதன்(சிவபுரம்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், அமரர் க.காமாட்சி, அமன்சி, தெய்வானை ஆகியோரின் மருமகனும், திரு.கே.ஆர்.கந்தையா (கனடா) அவர்களின் பெறாமகனும் ஆவார்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றேன். இறுதிக்கிரியைகள் பற்றி பின்னர் அறிவிக்கப்படும்.

கு.புவனேந்திரன்,
இல.14,சிவபுரம்,,வவுனிக்குளம்.

(5050)

தகவல்
இராமநாதர் சங்கரப்பிள்ளை.(தந்தையார்)

## கேள்வி கோரல்

### யாழ்ப்பாணத் தொல்லியல் நூதனசாலைக் கட்டடத் திருத்த வேலை


மேலே குறிப்பிடப்படும் வேலைக்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் ICTAD இல் பதிவு செய்யப்பட்ட M-8 தரத்திலுள்ள இலங்கைக் கட்டட ஒப்பந்தக்காரர் சங்க அங்கத்தவர்களிடமிருந்து கோரப்படுகின்றன. கேள்விகள் இச் செயலகத்தில் ரூபா1000/= மீளளிக்கப்பட முடியாத கட்டணம் செலுத்தப் பெறப்பட்ட கேள்விப் படிவத்தில் இணைப்பிரதிகளில் 2004.09.24ஆம் திகதி பிற்பகல் 2.00மணி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப் படிவங்களை 2004.09.22 ஆம் திகதி பிற்பகல் 2.00மணி வரை இவ் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். கேள்விகளை அரசாங்கஅதிபர், மாவட்டசெயலகம், யாழ்ப்பாணம் என முகவரியிட்டுப் பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கலாம். அல்லது, நேரடியாக, தலைமைப்பீட உதவி அரசாங்க அதிபரின் அறையில் இதற்கென வைக்கப்பட்டுள்ள பெட்டியிலிடலாம். கேள்விகள் சமர்ப்பிக்கப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "யாழ். தொல்லியல் நூதனசாலைக்கட்டடத்திருத்தம்" எனக் குறிப்பிடவேண்டும். கால தாமதமாகச் சமர்ப்பிக்கப்படும் கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. மேலதிக விபரங்களை மாவட்ட செயலகத்தில் தலைமைப்பீட உதவி அரசாங்க அதிபரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

செ.பத்மநாதன்
அரசாங்க அதிபர்,
யாழ். மாவட்டம்.

(சி.100455)







பாக்தாத்தில் பொலிஸ் நிலையத்திற்கருகில் நேற்று நடைபெற்ற கார்க்குண்டு வெடிப்பில் பலியான ஒருவரின் சடலம் மீட்கப்படுவதையும், எரியும் வாகனங்களை அணைக்கும் தீயணைப்புப் படையினரையும் (சேதமுற்ற கார் ஒன்றையும்) படங்களில் காணலாம்.

# பாக்தாத் பொலிஸ் நிலையம் மீது நேற்றும் கார்க்குண்டுத் தாக்குதல்

### 47 பேர் பலி, பெருமளவானோர் காயம்

(பாக்தாத்)

**ஈராக்கின் தலைநகர் பாக்தாத்தின் மத்தியபகுதியிலுள்ள பொலிஸ் நிலையம் ஒன்றின் மீது நேற்று தற்கொலைப் படையாளி மேற்கொண்ட கார்க்குண்டுத் தாக்குதலில் நாற்பத்தேழு பேர் கொல்லப்பட்டனர். இதன்போது பெருந்தொகையானோர் காயமுற்றுள்ளனர்.**

தமது பணிகளை முன்னிட்டு. காலை வேளை கைபா வீதியிலுள்ள பொலிஸ் நிலையம் திறக்கப்படும் வரை வரிசையில் காத்திருந்த மக்களில் அநேகமானோர் இக்குண்டு வெடிப்பில் கொல்லப்பட்டும் காயமடைந்துமுள்ளனர்.

கைபா வீதி பாக்தாத்தில் மிகவும் நெரிசல் மிக்க வீதியாகும். அத்துடன் அண்மைக்காலமாக இடம்பெற்று வருகின்ற எதிர்ப்பு நடவடிக்கைகளின் மையப் பகுதியாகவும் இவ் வீதி விளங்குகின்றது. நேற்றுக் காலை இடம்பெற்ற இந்தக் குண்டு வெடிப்பு பாக்தாத்தில் அண்மைக்காலமாக இடம்பெற்ற குண்டு வெடிப்புக்களில் சக்தி வாய்ந்ததென்று கூறப்படுகிறது.

# தற்கொலைப் படையைச் சமாளிப்பது எப்படி? அமெ. இராணுவத்திற்கு இந்தியாவில் பயிற்சி

தற்கொலைப்படையைச் சமாளிப்பது எப்படியென்று அமெரிக்க இராணுவத்திற்கு இந்தியாவில் பயிற்சி அளிக்க முடிவுசெய்யப்பட்டுள்ளது. ஈராக்கில் சதாம் ஹூசைனின் தற்கொலைப் படையினர் தினந்தோறும் அமெரிக்கப் படைகள் மீது அதிரடித்தாக்குதல் நடத்தி வருகின்றனர். இதனால் அமெரிக்க இராணுவம் தொடர்ந்து பலியாகி வருகின்றனர். ஈராக்கில் உள்ள அமெரிக்க இராணுவத்திற்கு உதவும் நாடுகளையும் இந்தத் தற்கொலைப் படையினர் விட்டு வைக்கவில்லை. ஈராக்கில் அமெரிக்காவுக்கு ஆதரவாக செயற்பட்ட குவைத் நிறுவன சாரதிகள் 7பேரை தற்கொலைப் படையினர் கடத்தி பணயக் கைதிகளாக வைத்திருந்தனர். இடை விடாத தீவிர முயற்சிக்குப் பின் னரே 7 பணயக்கைதிகளும் உயி ருடன் மீட்கப்பட்டனர். இவர்களில் மூன்று பேர் இந்தியர்கள். இதற் கிடையில் ஈராக்கில் இருந்த நேபாள நாட்டைச் சேர்ந்த 11பேரை தற்கொலைப்படையினர் கடத்திச் சென்று துப்பாக்கியால் சுட்டுக் கொன்றதுடன், பணயக்கைதியின் கழுத்தை அறுத்து தங்களது ஆத்திரத்தை வெளிப்படுத்தினர். ஈராக்கில் தற்கொலைப் படையினரின் அதரடித் தாக்குதலைச் சமாளிக்க முடியாமல் அமெரிக்க இராணுவம் திணறுகிறது. எந்த நேரத்தில் எந்தத் திசையில் இருந்து எந்த உருவத்தில் தற்கொலைப் படையினர் தாக்குதல் வரும் என்று சொல்ல முடியாது. இதனால் தற்கொலைப்படையின் தாக்குதலை சமாளிப்பது பற்றி அமெரிக்க இராணுவம் தீவிரமாக ஆலோசனை செய்தது. இந்தியாவில் இதற்கான பயிற்சி கொடுக்கப்படுவது பற்றி அமெரிக்க இராணுவ அதிகாரிகளுக்கு தகவல் கொடுக்கப்பட்டது. இது பற்றிப் பலமுறை ஆலோசனை செய்த அமெரிக்க இராணுவ அதிகாரிகள், திறமையான இராணுவ அதிகாரிகள் சிலரை இந்தியாவில் பயிற்சி பெற அனுப்புவது என்று முடிவு செய்தனர். இந்தியாவில் மிசோரம் மாநிலம் வைரரெங்டே நகரில் இதற்காக ஒரு பயிற்சிப் பள்ளி கடந்த ஓகஸ்ட் மாதம் தொடங்கப்பட்டது. அங்கு தற்கொலைப் படையினர் மற்றும் கிளர்ச்சிக்காரர்களின் தாக்குதல்கள் கொரில்லாத் தாக்குதல்கள், தற்கொலைப் படையினரின் வெடிகுண்டுத்தாக்குதல்கள் ஆகியவைகளை எப்படிச் சமாளிப்பது என்று பயிற்சி கொடுக்கப்படுகிறது. அத்துடன் தற்கொலைப்படைக்கு மூளையாக செயற்படுபவர்களையும் எப்படி கண்டுபிடித்து அடக்குவது என்ற பயிற்சியும் கொடுக்கப்படுகிறது. இந்தப்பயிற்சிப் பள்ளிக்கூடத்திற்கு அமெரிக்க இராணுவ அதிகாரிகள் 12 பேர் இந்த மாத இறுதியில் வர இருக்கிறார்கள்.



கியூபாவில் பைனர் டெல்நியோ மாகாணத்தில் கடற்கரை நகரமான பிளயாகானாவில் ஜவன் சூறாவளியால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் சிக்குண்டிருக்கும் வீடு




ஈராக்கிற்கு பிரிட்டன் படைகளை அனுப்பித் தாக்குதலை நடத்துவதை பிரான்ஸ் சனாதிபதி ஜெக்ஸ் சிராக்ஸ் கண்டித்தமையால் பிரிட்டன் (SUN) பத்திரிகை "சிராக்ஸ்ஸை" ஒரு அற்பன் எனத் தலைப்பிட்டு செய்தி வெளியிட்டுள்ளது.

# ஈராக்கில் துருக்கிய பணயக் கைதி கழுத்தறுத்துக் கொலை!

அல்கைய்தா ஆதரவு இயக்க தீவிரவாதிகள் பணயக் கைதியாக பிடித்து வைத்து இருந்த துருக்கி நாட்டு பாரஊர்தி சாரதி கழுத்தை அறுத்து கொடூரமாக கொலை செய்தனர். இந்தக் காட்சி இணையத் தளத்தில் வெளியிடப்பட்டது.

# ஈராக் மூன்று நாடுகளாக பிரியும் வாய்ப்பு உள்ளதென்கிறது அமெரிக்கா

ஈராக்கில் உள்நாட்டுப் போர் ஏற்பட்டு அதைத் தொடர்ந்து இன அடிப்படையில் 3 நாடுகளாகப் பிரியும் வாய்ப்புள்ளது. ஆனால் அது நடக்காது என அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் கொலின்பவல் கூறியுள்ளார். "இதற்கு எப்போதும் வாய்ப்புள்ளது. ஆனால் அது நடக்கும் என்று நான் கருதவில்லை" என என்.பி.சி. தொலைக்காட்சிக்கு ஞாயிற்றுக்கிழமை அளித்த பேட்டியின்போது பவல் கூறினார். ஈராக்கில் அமைக்கப்பட்டுள்ள இடைக்கால அரசில் குர்துகள்,ஷியா,சன்னி ஆகிய பிரிவுகளைச் சேர்ந்த தலைவர்கள் இடம் பெற்றுள்ளனர். தற்போது நிலவும் வன்முறை மோதல்களுக்கு முடிவு காண அவர்கள் ஒருங்கிணைந்து செயற்படுகின்றனர் என்றார் கொலின்பவல்.

# ஐ.நா.சபையில் எந்த நாட்டுக்கும் "வீட்டோ" அதிகாரம் இருக்கக் கூடாது

### -இந்திய சனாதிபதி அப்துல்கலாம் கருத்து

" ஐ.நா.சபையில் எந்த நாட்டுக்கும் இரத்து அதிகாரம் இருக்கக்கூடாது" என்று சனாதிபதி அப்துல்கலாம் கருத்து தெரிவித்து இருக்கிறார். சனாதிபதி அப்துல்கலாம் தான்சானியா, தென் ஆபிரிக்கா நாடுகளில் ஒரு வார காலம் சுற்றுப்பயணம் மேற் கொண்டு இருக்கின்றார். தான் சானியா தலைநகர் தர்-இஸ்-சலா மில் பல்வேறு துறை அறிஞர்கள் பங்கேற்ற கலந்துரையாடல் நிகழ்ச்சியில் சனாதிபதி அப்துல்கலாம் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார். பயங்கரவாதத்தை முறியடிக்க ஐக்கிய நாடுகள் சபையில் நிறைவேற்றப்படும் தீர்மானங்களை இரத்து செய்யும் அதிகாரம் (வீட்டோ பவர்) அமெரிக்கா, பிரான்ஸ் போன்ற வல்லரசு நாடுகளுக்கு தற்போது இருந்து வருகிறது.

ஐ.நா.சபையில் எந்த நாட்டுக்கும் இரத்து அதிகாரம் இருக்கக்கூடாது உலகளாவிய பயங்கர வாதத்தை முடிவுக்கு கொண்டு வர புதிய உலக அமைப்பு தேவை என்றும் கருத்துத் தெரிவித்தார் "ஐ.நா.சபை நிதி ஆதாரங்களுக்காக எந்த நாட்டின் நிதி ஆதாரத்தையும் நம்பி இருக்கக்கூடாது. நிதி ஆதாரத்துக்காக ஐ.நா.சபைக்கு தனி அமைப்பு அவசியம் என்று கூறிய அப்துல் கலாம் "இது எங்கள் அரசின் (இந்தியா) கருத்து அல்ல. எனது தனிப்பட்ட கருத்து என்றும் விளக்கம் அளித்தார்."

### தீவிபத்து

அமெரிக்காவில் ஓஸியோ மாநிலத்தில் அடுக்குமாடிக் கட்டடமொன்றில் தீ விபத்து ஏற்பட்டதில் 10 பேர் உடல் கருகி உயிரிழந்துள்ளனர். ஓஸியோ மாநிலத்தில் நக ராட்சிப் பகுதியிலேயே இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் நடந்துள்ளது.

இதனிடையே மேல்தளத்தில் வசித்தவர்கள் தீ பீதியினால யன்னல் ஊடாகக் குதித்ததில் அதிகமானோர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். தீயணைப்புப் படையினரின் பல மணிநேரப் போராட்டத்தின் பின்னரே தீயைக் கட்டுப்படுத்தினர். இரு குழுக்களிடையே ஏற்பட்ட மோதலே தீவிபத்து ஏற்படக் காரணம் என்று கூறப்படுகின்றது.

# அணுவாயுதத் திட்டம் குறித்து தகவல் வெளியிட ஈரானுக்கு காலக்கெடு விதிக்க வேண்டும்

### சர்.அணுசக்தி மையத்திடம் பிரான்ஸ்,பிரிட்டன், ஜேர்மனி கோரிக்கை

ஈரான் தனது அணுவாயுத திட்டம் தொடர்பாக எதிர்வரும் நவம்பர் மாதம் முடிவதற்குள் முழுமையான தகவல்களை வெளியிடுவதற்கு காலக்கெடு விதிக்க வேண்டுமென்று சர்வதேச அணுசக்தி மையத்திடம் ஜேர்மனி, பிரான்ஸ், டென்மார்க், பிரிட்டன் நாடுகள் கூட்டாக கோரிக்கை விடுத்துள்ளன.

எனினும் தாம் உள்நாட்டுப் பிரஜைகளுக்காக இந்த நடவடிக்கையினை மேற்கொண்டிருப்பதினால் இது பற்றி வெளியுலகிற்கு அறிவிக்க வேண்டிய அவசியம் இல்லை என்று ஈரான் தெரிவித்துள்ளது.

பெல்ஜியத் தலைநகரில் நடைபெற்றுவரும் ஐரோப்பிய ஒன்றிய வெளிநாட்டமைச்சுக்களின் மாநாட்டில் கலந்து கொண்ட பிரிட்டிஷ் வெளிநாட்டமைச்சர் ஜக்ஸ் சிறே சர்வதேசத்தின் நம்பிக்கையினைக் குறைக்கும் விதத்தில் ஈரான் செயற்படுவதாக குற்றம் சாட்டியுள்ளார்.

யுரேனியம் மேம்படுத்தும் நடவடிக்கைகளை தாம் இடைநிறுத்துவதாக கடந்த வருடம் ஈரான் உறுதியளித்திருந்த போதும், தற்போது அதனை மீறி வருவதாக ஜேர்மன், பிரான்ஸ், இங்கிலாந்து ஆகிய நாடுகள் மாநாட்டில் கூறியுள்ளன.

இதன் பொருட்டு சர்வதேச அணுசக்தி மையம் ஈரானுக்கு நவம்பர் மாத இறுதிவரை காலக்கெடு விதிக்க வேண்டும் என்று வேண்டுகோள் விதித்துள்ளன.

எனினும் அணுசக்தி விடயத்தில் விசாரணைகளை மேற்கொள்ளும் போது இவ்வாறு காலக்கெடு விதிப்பது இயலாது என்று சர்வதேச அணுசக்தி மையத்தலைவர் முகமட் எல்பாரடி கூறியுள்ளார்.

இதேவேளை அணுசக்தி உற்பத்தி நடவடிக்கைகளைக் கைவிடுவது என்பது தற்போது விவாதிக்கப்பட வேண்டிய ஒன்றல்ல என்று கூறியுள்ள ஈரான் எதிர்காலத்தில் தாம் அணுவாயுதங்களைத் தயாரிக்கப் போவதில்லை எனும் உறுதி மொழியை வழங்கியுள்ளது.

# போராட்டம் வெற்றியின் விளிம்புக்குவர மக்களின் உயர்வான தியாகமே காரணம்

-கிளி.மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர்

(அலுவலக செய்தியாளர்)

**புலம்பெயர்ந்து வாழும் எமது மக்களின் உதவிகளும், இங்கிருந்து போருக்கு நேரடியாக முகம் கொடுக்கும் மக்களின் தியாகமுமே இன்றைய எமது போராட்டம் வெற்றியின் விளிம்பிற்கு வரக் காரணமாக அமைந்தன. இவ்வாறு கிளிநொச்சி மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் காண்டீபன் தெரிவித்தார்.**

நேற்று முன்தினம் கண்டாவளை மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற கணினிப்பிரிவு ஆரம்பவிழாவில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவ்வுரையில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

நாங்கள் நீண்டகாலமாக யுத்த வாழ்விற்குள் தள்ளப்பட்டிருந்தோம். மிகவும் துயரமான சம்பவங்களால் நிம்மதியிழந்து, சொத்துக்களை இழந்து, உறவுகளை இழந்து, எமது ஊரைவிட்டு எங்கெங்கோ வாழ்ந்தோம். நாங்கள் துன்பங்களைச் சந்தித்த காலப் பகுதியிலே எமது உறவுகள் வழங்கிய உயிர்த் தியாகத்தினாலேயே தற்போதைய இந்த சமாதான சூழ்நிலையுடனான காலத்தை நாம் விலையாகப் பெற்றுள்ளோம்.

புலம்பெயர்ந்து வாழும் எமது மக்களின் உதவிகளும், இங்கிருந்து போருக்கு நேரடியாக முகம் கொடுக்கும் மக்களின் தியாகமுமே இன்றைய எமது போராட்டம் வெற்றியின் விளிம்பிற்கு வரக்காரணமாக அமைந்தன.

இந்தச் சமாதான காலப்பகுதியிலும் கூட, புலம்பெயர்ந்து வாழும் எமது உறவுகள் எம் தேசத்திற்கு ஏதாவதொன்றைச் செய்யவேண்டும் என்ற உண்மையான உணர்வோடு வழங்கும் உதவிகள் எதிர்கால எமது சமுதாயத்தின் உறுதிப்பாட்டையும், அறிவியல் ரீதியான வளர்ச்சியையும் நிச்சயமாகத் தோற்றுவிக்கப் பெரும் வாய்ப்பாக அமைந்துள்ளன.

எனவே எமது மக்கள் இந்தக் குறுகியகால சமாதானச் சூழலைப் பயன்படுத்தி உலகத்தின் அறிவியல் நீரோட்டத்தின் தன்மையில் ஒருபகுதியையேனும் பெற முயற்சிக்க வேண்டும் எனக்கேட்டுக்கொண்டார்.

## சிரமதானம்

(கிளிநொச்சி)

தியாகி லெப்.கேணல் திலீபனின் 17ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு கிளிநொச்சி சமுதாய மேம்பாட்டு நிலையத்தினராலும், கற்கையாளர்களினாலும் நேற்று சிரமதானப்பணி மேற்கொள்ளப்பட்டது. (15)

## கிராமிய அபிவிருத்தி வங்கியின் மன்னார் மாவட்டக் கிளை திறப்பு

(அலுவலக செய்தியாளர்)

கிராமிய அபிவிருத்தி வங்கியின் மன்னார்க் கிளை திறப்புவிழா நிகழ்வு இன்று 15 ஆம் திகதி முற்பகல் 11 மணிக்கு வைபவ ரீதியாக நடை பெறவுள்ளது.

பிரதானசாலை, அடம்பன் மன்னாரில் மேற்படி வங்கியின் கிளை, மன்னார் மாவட்ட மக்கள் நலன்கருதித் திறந்துவைக்கப் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தமிழீழ மக்களின் பொருளாதார வளத்தை மேம்படுத்தும் வகையில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் கிராமிய அபிவிருத்தி வங்கிக்கிளைகள் வடதமிழீழத்தில் கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, முள்ளியவளை, மல்லாவி, கனகராயன்குளம், ஆண்டான்குளம், பூநகரி போன்ற இடங்களிலும் தென்தமிழீழத்தில், திருகோணமலை-கடற்கரைச் சேனையிலும் ஏற்கனவே இயங்கிவருகின்றன.

இவ்வங்கிக்கிளைகளில் விவசாயக்கடன், சுயதொழிற்கடன், தொழிற்றுறை மேம்பாட்டுக்கடன், வியாபாரக்கடன், கடற்றொழிற் கடன், வைப்பிற்கு எதிரான கடன் போன்ற கடனுதவித் திட்டங்கள், நடைமுறைக் கணக்கு, நிலையான வைப்புக்கணக்கு, தளிர் சேமிப்புக்கணக்கு விவசாய முதலீட்டு சேமிப்புக் கணக்கு, சாதாரண சேமிப்புக் கணக்கு போன்ற கணக்குகள் என தமிழீழ மக்களின் வளமான வாழ்விற்கு வழிகாட்டியாக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் கிராமிய அபிவிருத்தி வங்கி இயங்கி வருகின்றது. (சோ,கு, 15)

## பாண்டியன் குளத்தில் வீரமுரசு

(மல்லாவி)

முல்லை மாவட்ட பாண்டியன் குளப் பிரதேசத்தில் செல்வபுரம் கிராமத்தில் வீரமுரசு நிகழ்வு வலயப் பொறுப்பாளர் சுடர்குமரனின் ஒழுங்குபடுத்தலில் செல்வபுரம் கலைமகள் விளையாட்டு மைதானத்தில் சனிக்கிழமை இரவு 7.45 மணிக்கு பாண்டியன்குளம் கோட்ட தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர் சி.சண்முகலிங்கம் தலைமையில் இடம் பெற்றது.

இந்நிகழ்வில் பொதுச்சுடரினை முல்லை மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவைப் பொறுப்பாளர் மயூரன் ஏற்றிவைக்க, மாவீரர்களின் திருவுருவப் படங்களிற்கு செல்வபுரம் ஊரக தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் க.சந்திரசேகரன், மாவீரரின் தந்தையான ஜெயராசா, செல்வபுரம் மாவீரர் படிப்பகத் தலைவர் இ.செல்வநாயகம் ஆகியோர் ஈகச்சுடர் ஏற்றி மலர்வணக்கம் செலுத்தினர். அகவணக்கத்தைத் தொடர்ந்து இடம்பெற்ற தலைமையுரையையடுத்து கருத்துக்களை முல்லை மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர் அ.தனிநாயகம், பாண்டியன் குளப்பிரதேச தேசிய எழுச்சிப்பேரவை உப செயலாளர் சு.பரமானந்தம், வன்னிப் பாராளுமன்ற உறுப்பினரின் செயலாளர் நி.வேதவனம் ஆகியோர் நிகழ்த்த, சிறப்புரையை முல்லை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன் நிகழ்த்தினார். தொடர்ந்து கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (24)

## குடும்பத் தகராறின் காரணமாக வீடு முற்றாக எரிந்து நாசம்!


*-கணவன், மனைவிக்கு பலத்த தீக்காயம்*

(அலுவலகசெய்தியாளர்)

கணவன் மனைவிக்கிடையிலான குடும்பத் தகராறினால் அவர்களின் வீடு முற்றாக எரிந்து நாசமானதுடன் அவர்களும் பலத்த தீக்காயங்களுக்குள்ளாகினர்.

இந்தச் சம்பவம் பற்றித் தெரிவிக்கப்படுவதாவது, கடந்த 12ஆம் திகதி கிளிநொச்சி, தருமபுரம் மேற்குப் பகுதியில் குடும்பத் தகராறினால் மனைவி தனக்குத் தானே மண்ணெண்ணெய் ஊற்றித் தீவைத்தார். கணவன் அவரைக் காப்பாற்ற முயற்சி மேற்கொண்ட வேளை இருவரும் தீயில் சிக்கிக் கொண்டனர்.

இவர்களை அயலவர்கள் மீட்ட போதிலும் வீடும் அதிலிருந்த உடமைகள் அனைத்தும் தீயினால் முற்றாக எரிந்து நாசமாகின. தீக் காயங்களினால் திப்புற்ற



இருவரும் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (ச)

## அளம்பில் திலீபன் மருத்துவமனை மருத்துவர் முள்ளியவளை வைத்தியசாலையில் சேவை

-நோயாளர் அவலநிலை போக்க உதவி

(முள்ளியவளை)

அளம்பில் தியாக தீபம் திலீபன் மருத்துவமனை வைத்தியர் திருமதி செவ்வானம் முள்ளியவளை அரசினர் வைத்தியசாலையில் கடந்த சில நாட்களாக சேவை செய்து வருகின்றார்.

முள்ளியவளை அரசினர் வைத்தியசாலை வைத்தியர் விடுமுறையில் சென்றதனால் இந்தச் சேவையினை அளம்பில் திலீபன் மருத்துவசேவை மருத்துவர் மேற்கொள்கின்றார்.

முள்ளியவளை அரசினர் வைத்தியசாலை ஒரேயொரு வைத்தியருடன் மட்டுமே நீண்ட காலமாக இயங்கி வருகின்றமை தெரிந்ததே. இங்குள்ள மகப்பேற்று விடுதியையும் இவரே கவனித்து வருகின்றார்.

இந் நிலையில் விடுமுறையில் குறித்த வைத்தியர் செல்லும் நாட்களில் நோயாளர்கள் சிகிச்சை பெற முடியாது பெரும் அவலத்தைச் சந்தித்து வருகின்றமை பல தடவைகள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை பிரதேச சபையினால் நிறுவப்பட்ட ஆயுர் வேத வைத்தியசாலை முழுமையாக இப்பகுதியில் இயங்கி வருவதால் பெருமளவான மக்கள் அங்கும் சென்று சிகிச்சை பெற்று வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (20)

## வவுனியா நகரில் சடலம் மீட்பு

(செட்டிகுளம்)

வவுனியா புகையிரத வீதியில் இனம் தெரியாத சடலம் ஒன்றை வவுனியா பொலிசார் மீட்டுள்ளனர். இறந்தவர் யார் என்று இனம் காணபடவில்லை. இறந்தவர் பிச்சை எடுப்பவராக இருக்கலாம் என்று தெரிவிக்கப்படுகிறது. மீட்கப்பட்ட சடலம் வவுனியா பொது மருத்துவ மனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (21)

## பயிற்சிநெறி விரைவில் ஆரம்பம்

தேசிய பயிலுனர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையால் ஆரம்பிக்கப்படவிருந்த கணினிப்பயிற்சி நெறி முல்லைத்தீவு மகாவித்தியாலயத்தில் மிக விரைவில் ஆரம்பிக்கப்படுமென முல்லைத்தீவு மாவட்ட தொழிற் பயிற்சிப் பரிசோதகர் நா.தே.ரத்னகுமார் தெரிவித்துள்ளார்.

## கட்டடம் திறப்பு

(முல்லை)

முள்ளியவளை றோ.க. பாடசாலையில் புதிய வகுப்பறைக் கட்டடம் நிகொட் திட்டப் பணிப்பாளா லங்காநேசனால் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வு கடந்த 6ஆம் திகதி இடம் பெற்றது. (20,ஆ)

## உலக ஆசிரியர் நாளை முன்னிட்டு ஆசிரியர்களுக்கான போட்டிகள்

(பூநகரி)

எதிர்வரும் (06.10.2004) உலக ஆசிரியர் நாளை முன்னிட்டு தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவையும், தமிழ வளர்ச்சிக்கழகமும் இணைந்து தமிழ்மொழிமூலம் கற்பித்தலை மேற்கொள்ளும் வடக்கு,கிழக்கு மலையக ஆசிரியர்களிற்கிடையே தமிழ் மொழித்திறன் போட்டியை நடாத்த உத்தேசித்துள்ளன.

இவ் வினாத்தாள் பகுதி I, பகுதி II என வகைப்படுத்தப்படும். இரு வினாத்தாள்களும் 3மணித்தியாலயங்கள் கொண்டவை. இதில் தொண்டர் ஆசிரியர்கள் உட்பட சகல ஆசிரி யர்களும் பங்குபற்றலாம். அதிபர், சேவைக்கால ஆலோசகர், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் பங்கு பற்ற முடியாது. நடைபெறும் இடம், காலம் என்பன பின்னர் அறிவிக் கப்படும்.

தேசிய மட்டத்தில் 5இடங்களைப் பெறும் ஆசிரியர்களுக்கு வெள்ளிப்பதக்கமும், 5000.00 ரூபாய் பணம் மற்றும் சான்றிதழும் வழங்கப்படும்.

வலய மட்டத்தில் கூடிய புள்ளிகளைப் பெறும் மூவருக்கு 1000 ரூபாவும், சான்றிதழும் வழங்கப்படும் என தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவையின் நடுவப்பணியகம் அறிவித்துள்ளது. (34)

## வட்டுவாகற் பகுதியில் சனசமூக நிலையம் திறப்பு

(முல்லை)

வட்டுவாகல் உதயசூரியன் சனசமூக நிலையம் இன்று 15 ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

1990 ஆம் ஆண்டு இராணுவ நடவடிக்கையினால் சிதைக்கப்பட்ட இக் கிராம சனசமூக நிலையக் கட்டடம் 2004 ஆம் ஆண்டு முன்னேற்பாட்டு நிதியுதவியுடன் இக்கிராம மக்களினால் புனரமைக்கப்பட்டே திறப்புவிழா நடைபெறவுள்ளது. இந் நிகழ்வானது உதயசூரியன் சனசமூக நிலையத் தலைவர் தலைமையில் நடைபெறவுள்ளது. (20)

## அத்தியாவசியசேவை கூட்டம் பிற்போடல்

(கண்டாவளை)

கண்டாவளைப் பிரதேச செயலர் பணிமனையில் இன்று நடைபெறவிருந்த மாதாந்த அத்தியாவசிய சேவைகள் குழுக்கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது. இந்த அத்தியாவசியக் குழுக்கூட்டம் எதிர்வரும் 22.09.2004ஆம் திகதி நடைபெறுமென பிரதேச செயலர் சி.சத்தியசீலன் அறிவித்துள்ளார். (14)

## கிளி.கால்பந்தாட்ட அணிக்குப் பாராட்டு

(அலுவலக செய்தியாளர்)

பதுளையில் நடைபெற்ற தேசிய மகளிர் கால்பந்தாட்டப் போட்டியில் மூன்றாம் இடத்தைப் பெற்ற மகளிர் கால்பந்து அணியினரை கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம் பதக்கம் அணிவித்து பாராட்டிக் கௌரவித்தார். (சோ,கு)

## 4,180 பேர் சிகிச்சை

(முள்ளியவளை)

முள்ளியவளை, அரசினர் வைத்தியசாலையில் கடந்த ஓகஸ்ட் மாதம் வெளி நோயாளர் பிரிவில் பொதுவான நோய்களுக்காக 2907 பேரும், சாதாரண காய்சசலினால் 561 பேரும், சிரங்கிற்காக 354 பேரும், குருதிச் சோகையினால் 231 பேரும, மலேரியாக் காய்ச்சலினால் 40 பேரும், வயிற்றோட்டத்தினால் 21 பேரும் சிகிச்சை பெற்றுள்ளதுடன், மேற்படி வைத்திய சாலையின் மத்திய மகப்பேற்று மனையில் கடந்த மாதம மகப்பேற்றுக்காக 42 நிறைமாதக் கர்ப்பிணித் தாய்மார்கள் அனுமதிக்கப்பட்டு இங்கு 25 சிசுப் பிறப்புக்கள நிகழ்ந்துள்ளன. (ஆ)

# ஊடகவியலாளருக்கான நிதியில் மோசடி
# யாழ்.ஊடகவியலாளர் சங்கம் கண்டனம்

## –பல்கலைக்கழக துணைவேந்தருக்கு கடிதமும் அனுப்பிவைப்பு

(யாழ்ப்பாணம்)

**யாழ்ப்பாண ஊடகவியலாளருக்கான நிதி மோசடி செய்யப்படுவதைக் கண்டித்து யாழ்ப்பாண ஊடகவியலாளர் சங்கம் உண்ணா விரதப் போராட்டம் ஒன்றை ஆரம்பிக்கவுள்ளதாக எச்சரித்துள்ளது.**

அச்சங்கம் யாழ்.பல்கலைக் கழகத் துணைவேந்தருக்கு இது குறித்து எழுதியுள்ள கடிதத்தில், யாழ்ப்பாணத்தில் உள்ள ஊடகவியலாளர்களின் நன்மை கருதி 180இலட்சம் ரூபா நிதியினை வெளிநாட்டு நிறுவனம் ஒன்று (யுனெஸ்கோ) யாழ்ப்பாணத்தில் தற்போது இயங்கும் ஊடகவியலாளர்கள் பயிற்சி நிலைத்திற்கு வழங்கியிருந்தது. இதற்குப் பொறுப்பாக இந்தியாவைச் சேர்ந்த அருட்செல்வம் அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார். தற்போது இந்த நிலையம் யாழ்ப்பாணம் சிற்றிகோலில் யாழ்.பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கிவருகிறது. இந் நிலையத்தால் யாழ்ப்பாணத்தில் உள்ள ஊடகவியலாளர்களாகிய எமக்கு எந்த நன்மையும் ஏற்படவில்லை. எமது பெயரில் பெரும் மோசடிகள் மட்டுமே இடம்பெற்று வருகின்றன. எமக்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி எமது பெயரில் மோசடி செய்யப்படுவதை யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தரும் அனுமதிக்கிறார் என்றே தோன்றுகிறது. எமது மண்ணிற்குரிய வளம் சுரண்டப்படுவதை எமது சங்கம் வன்மையாகக் கண்டிப்பதுடன் உடனடியாகக் குறிப்பிட்ட நிலையத்தை ஊடகவியலாளரின் பாவனைக்கு விடுமாறும் வேண்டுவதுடன் பின்வரும் கோரிகையையும் முன்வைக்கிறோம்.

1)குறிப்பிட்ட நிதி தொடர்பான கணக்கும் எமக்குக் காட்டப்பட வேண்டும். 2)உடனடியாகப் பரீட்சைகள் எதுவும் இன்றி ஊடகவியலாளர்களிற்கு நேர்முகத் தேர்வின் மூலம் பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும். 3) ஏற்கனவே திட்டமிடப்பட்டபடி மூன்று மாடிக் கட்டடம் கட்டி முடிக்கப்பட வேண்டும். 4)60 வயதிற்கு மேற்பட்டோரிற்கு பயிற்சிகள் வழங்கப்படுவதை நிறுத்தி, இளம் பத்திரிகையாளர்களிற்கு பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும். 5) எமது நிதியில் ஊதியத்திற்காக மாதம் ஒன்றிற்கு ஒருஇலட்சம் ரூபா நிதி வழங்குவது நிறுத்தப்பட்டு, உள்நாட்டைச் சேர்ந்த ஒருவர் இணைப்பாளராக நியமிக்கப்படவேண்டும் 6) இரண்டாவது கட்டமாக ஊடகவியலாளர்கள் பயிற்சிக்குச் சேர்த்துக் கொள்ளப்பட்டு பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும்.

எம்மால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளிற்கு சாதகமான பதில் கிடைக்காவிட்டால் எதிர் வரும் 25.09.2004ஆம் திகதி முதல் யாழ்ப்பாணம் சிற்றிகோலில் எமது சங்கத்தலைவர் வே.தவச்செல்வம் அவர்கள் தலைமையில் உண்ணா விரதப் போராட்டத்தில் ஈடுபடுவோம் என்பதை யாழ்.பல்கலைக் கழகத் துணைவேந்தராகிய உங்களிற்கு அறியத்தருகிறோம் எனத் தெரிவித்துள்ளது.

# வலுவிழந்த உறவுகளுக்கு சக்கர நாற்காலி வழங்கப்பட்டது

யாழ்.மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினால் 15 வலுவிழந்த உறவுகளுக்கு நேற்று முன்தினம் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் வைத்து சக்கரநாற்காலிகள் வழங்கப்பட்டன.




இந் நிகழ்வு யாழ்.மாவட்ட தமிழர்புனர் வாழ்வுக் கழகத்தின் பணிப்பாளர் சு.ஜெயராஜ் தலைமையில் பிற்பகல் 3.30 மணிக்கு ஆரம்பமானது. ஆரம்ப நிகழ்வாக மங்கல விளக்கினை வைத்தியகலாநிதி திரு. வை.தியாகராஜா, பல்கலைக்கழக பேராசிரியர் க.தேவராசா, அரசசார்பற்ற இணையத்தலைவர். ஸ்ரீ சக்திவேல், யாழ். மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் செல்வி.கயல்விழி ஆகியோர் ஏற்றிவைத்தனர். ஆசியுரையை நல்லை ஆதீன முதல்வர் ஆற்றினார்.

## -பேச்சை மீள ஆரம்பிப்பதற்கு ஏதுவாக-

# புலிகளின் சமாதானச் செயலகத்துடன் அரசு உறவைப் பேணிவருகிறது

## -ஹரீம் பீரிஸ் யாழ்.இல் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கை அரசின் சமாதானச் செயலகம் சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பதற்கான முன்வரைவுகளைத் தயாரிப்பதற்கு ஏதுவாக விடுதலைப்புலிகளின் சமாதானச் செயலகத்துடன் தொடர்ந்தும் உறவுகளைப் பேணி வருவதாக ஹரீம்பீரிஸ் தெரிவித்தார்.

யாழ்.செயலகத்தில் இடம் பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் தற்போதைய சமாதான நடவடிக்கைகள் தொடர்பாக மேலும் பிரஸ்தாபிக்கையில், அரசசமாதான செயலகம் விடுதலைப்புலிகளது சமாதானச் செயலகத்துடன் தொடர்ச்சியாக உரையாடல்களை நடாத்திவருகின்றது. கடந்த ஏப்ரல் மாதத்துடன் தடைப்பட்டுப் போயுள்ள சமாதானப் பேச்சுக்கள் இதுவரை மீள ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை அவ்வாறு மீள ஆரம்பிக்கப்படுவதென்பதும் இலகுவானதோர் காரியமல்ல.

இதேவேளை சனாதிபதி சமாதான நடவடிக்கைகளை மீள முன்னெடுப்பது தொடர்பாக பல்வேறுபட்ட அரசியல் கட்சிகளுடனும் பேச்சுக்களை நடாத்திவருகின்றார். அத்துடன் அமைச்சரவை மட்டத்திலும் விடுதலைப்புலிகளின் இடைக்கால வரைவு தொடர்பாக தீவிரமாக ஆய்வுகள் இடம்பெற்று வருகின்றது.

யாழ்.குடாநாட்டில் உலர் உணவு நிவாரணம் பெறும் குடும்பங்கள் தொடர்ந்தும் நிவாரணக் கொடுப்பனவைப் பெற ஏதுவாக உலர்உணவு நிவாரண காலப் பகுதியை மேலும் நீடித்துள்ளோம். முதலில் 6மாதம் நீடித்து தற்போது 15மாதம் வரை அது நீடிக்கப்பட்டுள்ளது. எனினும் அடுத்த ஆண்டு முதல் சமுர்த்திக் கொடுப்பனவு யாழில் வழங்கப்படவுள்ளது. ஆனாலும் உலர் உணவு நிவாரணக் கொடுப்பனவிற்கென ஒதுக்கப்பட்ட நிதி வேறு மாவட்டங்களுக்கு செலவிடப்படாது யாழ்.மாவட்டத்திற்கே செலவிடப்படும் எனவும் அவர் உறுதியளித்துள்ளார்.

# தீவகத்திலும் ஈ.பி.டி.பீ முகாம்களுக்கு இராணுவ பாதுகாப்பு அதிகரிப்பு

## மக்கள் மத்தியில் அச்சம்

(தீவகம்)

யாழ். தீவகத்தில் நிலை கொண்டுள்ள ஈ.பி.டி.பியினருக்கு இராணுவத்தினரின் விசேட கொமாண்டோ அணியினரும் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரும் இணைந்து அதிகபட்ச பாதுகாப்பினை வழங்கி வருகின்றனர்.

தீவகத்தின் ஊர்காவற்துறையில் நிலைகொண்டுள்ள ஈ.பி.டி.பி.யினர் மீது இனந்தெரியாதோர் தாக்குதல் நடத்தியதையடுத்தே தீவகத்தின் சகல பகுதிகளிலும் உள்ள ஈ.பி.டி.பி உறுப்பினர்களது முகாம்கள்,வீடுகள் என்பவற்றிற்கு இவ்வாறான பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. தமிழ் தேச விரோத சக்திகளுக்கு படைத்தரப்பினால் வழங்கப்பட்டு வரும் அதிகபட்ச பாதுகாப்பானது மக்கள் மத்தியில் அச்ச உணர்வை ஏற்படுத்தியுள்ளது. (33)

# படையினரின் “பாஸ்” நடைமுறையை நீக்க கடற்றொழிலாளர் அமைப்புக்கள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாதகல் பகுதியைச் சேர்ந்த கடற்றொழிலாளர்களுக்கு விதிக்கப்பட்டுள்ள கடற்றொழிலுக்கான பாஸ் நடைமுறையை நீக்க வேண்டும் என அப்பகுதி கடற்றொழிலாளர்கள் அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

கடற்படையினரால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள மேற்படி பாஸ் நடைமுறை காரணமாக இயல்பான முறையில் மீன்பிடிக்க முடியவில்லை என்பதைச் சுட்டிக் காட்டியே இக்கோரிக்கையை விடுதுள்ளனர். கடற்றொழிலாளாகள் இதற்கு எதிராக போராட்டங்களை நடத்த முஸ்தீபு செய்திருப்பதாகவும் தெரிவித்துள்ளனா. (33)

# யாழ்.குறை நிவர்த்திவேலைகள் குறித்து அறிக்கை கோருகிறார் அரச அதிபர்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் உள்ள அனைத்து பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் காணப்படும் குறை நிவர்த்தி வேலைத்திட்டங்கள் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்கான அறிக்கைகளை உடனடியாக யாழ். அரச செயலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு யாழ். அரச அதிபர் செ. பத்மநாதன் கோரியுள்ளார்.

இவ் ஆண்டிற்கான அரசின் வரவு செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டின் கீழ் யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் மற்றும் குறை நிவர்த்தி வேலைத் திட்டங்கள் பற்றி ஆராயும் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் எதிர் வரும் 17,18ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளதால் அதில் பிரஸ்தாபித்து எதிர்கால நடவடிக்கைகளைத் திட்டமிட வசதியாகவே இவ அறிக்கை கோரப்பட்டுள்ளது. (33)

# மாதர் சங்கம், சமூக அபி.சங்கம் இணைந்து தீவகத்தில் அரசியல் விழிப்புணர்வு நடவடிக்கை

(தீவகம்)

யாழ்.தீவகத்தில் உள்ள மாதர்சங்கங்கள், சமூக அபிவிருத்திச்சங்கம் என்பன இணைந்து தீவகத்தின்பின்தங்கிய பிரதேசங்களில் வாழும் மக்களிடையே சமகால அரசியல் விழிப்புணர்வுகளை ஏற்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

அந்தவகையில், மேற்படி இரு அமைப்புக்களும் இணைந்து மக்களுக்கான சமகால அரசியல் கருத்தரங்குகளை நடத்திவருகின்றனர். தமிழீழ பெண்கள் பண்பாட்டுமையம், தேசிய எழுச்சிப் பேரவை போன்றவற்றின் அனுசரணையுடன் இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (33)

## கோரிக்கை

கடந்த காலயுத்த நடவடிக்கையினால் இடைநிறுத்தப்பட்ட நாவற்குழிச் சந்தியில் இருந்து கோவிலாக்கண்டி துறைமுகம் வரை துரிதகதியில் மின் இணைப்பை வழங்க உடன் நடவடிக்கையை மின்சாரசபை எடுக்கவேண்டும் என நாவற்குழி கோவிலாக்கண்டி மக்கள் கோரியுள்ளனர்.

இது குறித்து சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு மக்கள் சார்பில் கோரிக்கைகள் அடங்கிய கடிதம் கொடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (28)

## - இடம்பெயர்ந்த மக்களுக்கான -

# இருப்பிட வசதிகளை ஏற்படுத்த யு.என்.எச்.சி.ஆர் நிதி ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

வடமராட்சிக்கிழக்கிலிருந்து இடம்பெயர்ந்து அகதி முகாம்களில் வாழும் குடும்பங்களுக்கென இருப்பிட வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கவென அதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலயத்தால் (யு.என்.எச்.சி.ஆர்)28 இலட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்தியாவில் இருந்து வடமராட்சிக்கிழக்கிலிருந்து இடம்பெயர்ந்து வாழும் மக்களுக்கான வீடமைப்புத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வடமராட்சிக்கிழக்கிலிருந்து இடம்பெயர்ந்து அடிப்படை வசதிகள் அற்ற அகதி முகாம்களில் வாழும் மக்கள் படும் இன்னல்களைக் கவனத்தில் கொண்டே அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் சபையின் உயர்ஸ்தானிகராலயம் இந்நிதியை ஒதுக்கியுள்ளது. (33)

# கள்வர் கைது செய்யப்படாதது குறித்து கொடிகாமம் வர்த்தகர்கள் அச்சம்


(கொடிகாமம்)

கொடிகாமம் நகர்ப் பகுதியில் கடந்த சில மாதங்களில் மூன்று இடங்களில் நடைபெற்ற கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்ட குற்றவாளிகள் இதுவரை கைதுசெய்யப்படாதது குறித்து வர்த்தகர்கள் பெரும் அச்சம் தெரிவித்துள்ளனர்.

பருத்தித்துறைசாலையில் அமைந்துள்ள புடவைக்கடை ஒன்றிலும் மருந்தகம் ஒன்றிலும் அதேபோல் பிரதானசாலையில் அமைந்துள்ள பலசரக்குக்கடை ஒன்றிலும் நடைபெற்ற கொள்ளைச் சம்பவம் மற்றும் கொள்ளை முயற்சிகளில் ஈடுபட்ட குற்றவாளிகள் இதுவரை கைதுசெய்யப்படாதது குறித்து வர்த்தகர்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்.- இது குறித்து சிறிலங்காப் பொலிசாரிடம் முறையிட்டும் இதுவரை இக் குற்றவாளிகள் கைதுசெய்யப்படாதது, மேலும் இப்பகுதியில் கொள்ளைச் சம்பவங்கள் நடைபெற வாய்ப்புள்ளதாகவும் வர்த்தகர்கள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது. எனவே இக் கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்ட குற்றவாளிகளை இனங்கண்டு கைது செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என வர்த்தகர்கள் கேட்டுள்ளனர். (28)

# “மக்கள் அனைவரையும் அணிதிரட்டி விடுதலைப் போரை வென்றெடுப்போம்”

07-09-1987 அன்று கோட்டை இராணுவ முகாம் முன் வழிமறிப்புச் செய்த மக்கள் முன்னிலையில் ஆற்றிய உரை. பொதுக்கூட்டத்தில் திலீபன் அவர்கள் ஆற்றிய கடைசி உரையும் இதுவே ஆகும்.



அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய தமிழீழ மக்களே!

தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் உண்மை வடிவங்களை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும் நாளை எம்மக்கள் அழிக்கப்படும் நிலை ஏற்பட்டால் மீண்டும் ஆயுதங்களை நாம் தூக்குவோம் “எமது இறுதி இலட்சியம் தமிழீழம் தான்” என்று தலைவர் பிரபாகரன் மிகத் தெளிவாகக் கூறியிருக்கிறார். எமது போராட்ட வடிவங்கள் மாறலாமே தவிர எமது போராட்டத்தின் இலட்சியம் மாற முடியாது.

இதற்காகவே நாம் ஆயுதங்களைக் கையளித்தோம். ஆயுதக் கையளிப்பைச் சாட்டாக வைத்துக் கொண்டு மீண்டும் சமூக விரோதக் கும்பல்கள் இம் மண்ணில் உலாவுகின்றன. புலிகளின் கையில் நிர்வாகம் இருந்த காலகட்டத்தில் எந்தச் சமூக விரோதக் கும்பல்களும் தமிழ் மண்ணில் இருந்திருக்கவில்லை. ஒரு கொள்ளை கொலை இடம் பெறவில்லை. ஆனால் இன்று தினசரி கொள்ளை கொலைச்சம்பவங்கள் இடம் பெறுகின்றன.

இச்சமூக விரோதக் கும்பல்கள் முன்னரும் இதைத்தான் செய்தன. அதனால் தான் ஏனைய இயக்கங்களை புலி இயக்கம் தடை செய்தது. இவர்கள் எமக்கெதிராகத்தான் போராடிக் கொண்டிருந்தார்கள். இந்திய “றோ” அமைப்பு எங்களுக் கெதிராகவே செயற்படுகிறது. எங்களுக்கெதிராகச் செயற்பட்டு ஏனைய இயக்கங்களுக்கு ஆயுதங்களை கொடுத்துள்ளது.

எம்மைக் கொல்வதற்குப் பல திட்டங்களை “றோ”தயாரித்து, குறிப்பாக எமது தலைவர் வே.பிரபாகரனைக் கொலை செய்யத்திட்டமிட்டுள்ளது. எனவே தான் இந்த “றோ” அமைப்பைப் பகிரங்கமாகச் சந்தேகிக்கின்றோம். பகிரங்கமாகக் குற்றம் கூறுகின்றோம்.

எம்மால் தடை செய்யப்பட்ட இயக்கத்தின் உறுப்பினர்கள் இந்தியாவில் இருந்த வேளை இந்த “றோ” அமைப்புத்தான் இவாகளுக்கு ஆயுதங்களை வழங்கி எம்மண்ணிற்கு அழைத்து வந்தது” எம்மிடம் ஆயுதங்களைப் பறித்து சமூக விரோதக் கும்பல்களுக்கு ஆயுதங்களை வழங்கி விரோதச் செயல்களை இந்தியா தூண்டியுள்ளது.

கொள்ளையர்களிடம் இருந்து எம்மக்களைப் பாதுகாப்பதற்காக நாம் கிராமரீதியாக மக்கள் பாதுகாப்புக் குழுக்களை ஏற்படுத்தியிருந்தோம். கொள்ளைகளைத் தடுப்பதற்காக நிறுவப்பட்ட எமது பாதுகாப்புக் குழுக்கள் கூட சமூக விரோதக் கும்பல்களினால் தாக்கப்பட்டுள்ளன. அண்மையில் கொக்குவிலில் உள்ள குளப்பிட்டி என்னும் இடத்தில் உள்ள மக்கள் பாதுகாப்பு உறுப்பினர்கள் தாக்கப்பட்டுக் கடத்தப்பட்டனர். ஆனால் இதேவேளை இந்திய இராணுவத்தினர் அருகே இருந்தார்கள். இந்திய இராணுவம் அதைப் பார்த்துக்கொண்டுதான் இருந்தது. இவ்வாறாயின் நாம் எவ்வாறு இந்திய இராணுவத்தை அமைதிகாக்கும் படையினர் என ஏற்றுக் கொள்ள முடியும். இச்சமூக விரோதக் கும்பல்களுக்கு இந்திய இராணுவம் துணை போவதாக உள்ளது. நாம் தாக்கப்படும் போதும் கடத்தப்படும் போதும் இந்திய இராணுவத்திற்கு முன்பாகவே அவை இடம் பெறும் போது நாம் எப்படிப் பொறுமையாக இருக்க முடியும்.

ஒன்றை மட்டும் நான் தெளிவாகக் கூறிக்கொள்ள விரும்புகின்றேன் விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரையில் நாம் மரணத்திற்கு அஞ்சவில்லை. வாழ வேண்டுமென்றோ, ஆளவேண்டுமென்றோ ஆசை வைத்திருக்கவில்லை. அவர்களைப் பொறுத்தவரையில் தமிழீழ இலட்சியத்திற்காகவே போராடிக் கொண்டிருக்கிறார்கள். எங்களைச் சுற்றி துப்பாக்கிகளும் இரும்புக்கம்பிகளும் நிமிர்ந்து நிற்கின்றன. நாம் அனைவரும் மரணமாகத் தயாராகவே இருக்கின்றோம். புலிகள் இயக்கத்தின் அடிப்படை வாசகமே அதுதான். எமது இறுதி மூச்சுவரை நாம் மக்களைப் பாதுகாப்போமென்று தான் அடிக்கடி குறிப்பிடுகிறோம் மக்களுக்குச் சுபீட்சமான சுதந்திரம் கிடைக்குமானால் நாம் மரணமாகத் தயாராக இருக்கிறோம்.

இதற்காக நாம் தற்கொலைப் படைகளைக் கூட உருவாக்கியுள்ளோம். இதனை இந்திய ஆட்சியாளர்களும் இந்திய இராணுவமும் புரிந்துகொள்ள வேண்டும். அது மட்டுமல்ல சமூக விரோதக் கும்பல்களுக்கும் மிகவும் குறிப்பாகக் கூறுகிறோம், பகிரங்கமாகக் கூறுகின்றோம், நாம் குட்டக் குட்டக் குனிபவர்களல்ல. இதனை அவர்கள் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

இன்று எம்மிடம் ஆயுதங்கள் இல்லையென்றவுடன் மிகவும் பயங்கரமான அடாவடித்தனங்களில் அவர்கள் ஈடுபடு வதை மக்கள் அறிவர். எமது தோழர்களை அநியாயமாகக் கொலை செய்து வருவதையும் நீங்கள் அறிவீர்கள். நாம் தனித்து நின்று இச் சமூக விரோதக் கும்பல்களை ஒரே நாளில் தடை செய்தோம். அன்று எம்முடன் எதிர்கொள்ள முடியாமல் ஒழித்தோடியவர்களெல்லாம் இந்திய இராணுவத்தின் உதவியுடன் இன்று வந்திருப் பதை எம்மால் சகிக்க முடியாமல் உள்ளது. மிகவும் மனவேதனையுடன் இதை நான் கூறுகிறேன்.

இதேவேளை நான் தெளிவான விடயத்தைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். இந்து மகாசமுத்திரத்தைப் பொறுத்தவரையில் இந்தியா பிராந்திய வல்லரசு. அதை நாம் ஏற்றுக்கொள்கிறோம் இந்திய இராணுவத்திற்கு எதிராக அமெரிக்கா நிற்க முடியாது. அது எங்களுக்குத் தெரியும் இந்திய இராணுவம் தான் சர்வவல்லமை பொருந்திய இராணுவம். ஆனால் இந்திய இராணுவம் இலங்கையில் மக்கள் சக்திக்கு முன்னால் ஒன்றுமே செய்ய முடியாது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

ஏற்கனவே தலைவர் பிரபாகரன் டெல்லியில் இருந்த வேளை இங்கு நான்கு நாட்கள் மக்கள் மறியல் போராட்டம் நடத்தினார்கள்.

சர்வ வல்லமை பொருந்திய இந்திய இராணுவம் வடபகுதி முகாம்களில் இருந்த வேளை முகாம்களில் இருந்து வெளியே ஒரு அடி கூட எடுத்து வைக்க முடியவில்லை. ஏனெனில் மக்கள் எழுச்சியுடன் போராடியதால் இந்திய இராணுவம் எதிர் நிற்க முடியவில்லை.

வியட்னாமைப் பொறுத்தவரையில் வியட்னாமிய மக்கள் அமெரிக்க இராணுவத்திற்கெதிராகவே போராட்டம் நடத்தினார்கள். அந்த அடிபபடையில் நாமும் எம்மைப் பொறுத்தவரையில் கூறுகிறோம்; எமது மக்கள் பரிபூரணமாக எழுச்சி கொள்ள வேண்டும். இன்று கூட எங்கள் மத்தியில் அந்த நிலை இல்லாதது எமக்கு ஆறாத சோகத்தை ஏற்படுத்துகிறது. அந்த நிலைமை தோற்றுவிக்கப் படவேண்டும் என்பதற்காக நாம் எழுச்சியடைய வேண்டும்.

இப்படி எழுச்சியுடன் போராடினால் எவரும் இப்போராட்டத்திற்கு மதிப்பளித்தேயாக வேண்டும். ஒன்றைக் கூறுகின்றேன், மக்கள் அனைவரும் முழுமையாகப் போராடத்தயாரானால் நிச்சயமாகத் தமிழீழத்தை அமைக்கமுடியும். ஆனால் அந்தச் சூழ்நிலைகள் இல்லாதது எமக்கு வேதனையைத் தருகிறது. மக்களும் இணையவேண்டும் என்பதைத்தான் நாம் பல இடங்களில் வற்புறுத்திக் கூறியிருந்தோம்.

இன்று இந்தப் போராட்டத்தில் கூட எத்தனை ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டார்கள். ஆனால் வெளியே இலட்சக்கணக்கான மக்கள் இருக்கிறார்கள் அந்த நிலைமை மாற்றி அமைக் கப்பட வேண்டும். நிலைமை மாற்றி அமைக்கப்படுவதினூடாகத்தான் நாம் தமிழீழத்தை அமைக்க முடியும். அன்று கூட நாங்கள் கூறியிருந்தோம் இந்திய இராணுவத்திடம் நாம் ஏன் ஆயுதங்களைக் கையளித்தோம் என்று. மக்கள் முழு நாட்களும் எம்முடன் நின்றிருந்தால் புலிகள் ஆயுதங்களைக் கையளிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்க முடியாது. காலப் போக்கில் முழுமக்களையும் நாம் அணி திரட்டுவோம் என்ற அசையாத நம்பிக்கை எமக்குண்டு முழுமக்களையும் அணிதிரட்டித் தமிழீழ விடுதலைப் போராட்டத்தைவென்றெடுப்போம் என்ற நம்பிக்கையும் உண்டு.

இந்திய அரசும் இந்திய இராணுவமும் இலங்கை அரசாங்கமும் புரிந்து கொள்ள வேண்டியது என்னவெனில் முழுமையான மக்கள் சக்தி ஒன்று திரண்டால் ஒன்றுமே செய்ய முடியாது அடிப்படை உரிமையை வென்றெடுக்க நாம் தான் போராட வேண்டும். இதற்கு வேறுயாருடைய தயவையும் எதிர்பார்க்க முடியாது. ஏனெனில் நாமே எமது சுதந்திரத்தை உறுதிப்படுத்த முடியும். எமது போராட்டம் தொடரத்தான் போகிறது. இது ஒரு அடையாள மறியல் போராட்டம். இதைக் கூட நாம் பெருமளவில் செய்யத் திட்டமிடவில்லை. இப்போராட்டத்திற்கு எமக்கு சரியான தக்க பதில்கள் கிடைக்கவேண்டும்.

குறிப்பாகச் சிறையில் வாடும் தமிழ் இளைஞர்களை விடுவிப்பதாகவும் இலங்கை இந்திய ஒப்பந்தத்தில் குறிப்பிட்டார்கள். அவசரகாலச் சட்டத்தை நீக்குவதாகவும் அங்கு குறிப்பிட்டிருந்தார்கள். இவை மட்டுமல்ல இதைப் போன்று எத்தனையோ அம்சங்கள் ஒப்பந்தத்தில் உள்ளன. எதுவுமே நிறைவேற்றப்படவில்லை. நாம் ஒப்பந்தத்தை நிராகரிக்கிறோம். அதேவேளை தமிழ்ப் பிரதேசங்களில் சிங்களக் குடியேற்றங்கள் இடம் பெறுகின்றன. சிங்கள இராணுவமும் இன்னும் இன அழிப்பைத் தான் செய்து கொண்டிருக்கிறது. எமது அடிப்படை உரிமைகள் எல்லாம் படிப்படியாக நசுக்கப்பட்டு நாம் நிரந்தர அடிமையாவதை விரும்பவில்லை.

இக்காரணங்களுக்காகவே நாம் இந்தப் போராட்டத்தைத் தொடங்கியுள்ளோம். இவற்றிக்குச் சரியான தக்கபதில்கள் கிடைக்காவிட்டால் இப்போராட்டம் நிச்சயம் தொடரும். நான் மிகத் தெளிவாகக் கூறுகின்றேன். காலப்போக்கில் எமக்குச் சரியான தக்க பதில்கள் கிடைக்காவிட்டால் இந்திய இராணுவம் இங்கிருந்து நகர முடியாத நிலை ஏற்படலாம் அதை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

## கிளிநொச்சி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 12,141 பேருக்கு ருபெல்லா தடுப்பூசி வழங்கல்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்குட்பட்ட பகுதிகளில் 12,141 பேருக்கு சின்ன முத்து ருபெல்லா தடுப்பூசி மருந்து வழங்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே மேற்கொள்ளப் பெற்ற தரவுகளின் பிரகாரம் கிளிநொச்சி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை பிரிவில் 8066 பேருக்கு தடுப்புபூசி மருந்து வழங்குவது என தீர்மானிக்கப்பெற்றிருந்த பொழுதிலும் யாழ்ப்பாணம், முல்லைததீவு, வவுனியா, கொழும்பு மற்றும் ஏனைய மாவட்டங்களைச் சேர்ந்த இளைஞர் யுவதிகள் தங்கள் பகுதிகளில் தடுப்பூசி மருந்தினை பெற்றுக்கொள்ளாது இப்பகுதியினூடாக, பயணம் மேற்கொண்ட பொழுது அவர்களுக்கும் தடுப்பூசி மருந்து வழங்கியதன் காரணமாகவே 12.141 பேருக்கு மேற்படி தடுப்பூசி மருந்து வழங்கப் பெற்றுள்ளதென கிளிநொச்சி சுகாதாரத் திணைக்களத்தினர் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் இத்தடுப்பூசி மருந்து வழங்கலை கிளிநொச்சி சுகாதார பணிமனை எதிர்பார்த்த அளவில் மிகவும் சிறப்பாக நடைமுறைப் படுத்துவதற்கு சுகாதார திணைக்கள அலுவல்களும், தமிழீழ சுகாதார சேவையினரும், தொண்டு நிறுவனங்களும் சிறந்த பங்களிப்பினை நல்கியுள்ளனரென கிளிநொச்சி சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி சுஜந்தன் தெரிவித்தார். (சோ.கு)

## வீதி ஒழுங்கு நடைமுறை குறித்து புளியங்குளத்தில் கருத்தூட்டல்

வவுனியா, புளியங்குளம் பகுதி யில் தமிழீழ காவல் துறையினரின் வீதிப்போக்குவரத்துப் பிரிவினரால் வீதி ஒழுங்கு நடவடிக்கைகள் தொடர்பாக கருத்துட்டல் நிகழ்வு இடம்பெற்றுள்ளது.

கடந்த புதனன்று காலை வவுனியா, புளியங்குளம் இந்துக் கல்லூரியில் மாங்குளம் தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் லோகநாதன் தலை மையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பொதுச் சுடரினை புளியங்குளம் இந்துக் கல்லூரி அதிபர் கிருஷ்ண மூர்த்தி ஏற்றி வைக்க, தமிழீழ தேசியக் கொடியை புளியங்குளம் முன்னரங்க காவல் நிலையப் பொறுப்பாளர் மாறன ஏற்றிவைத்தா கிராம அலுவலர் யோகராஜா, வவுனியா வடக்கு பிரதேச அரசியலதுறைப் பொறுப்பாளர் திலீப் ஆகியோர் கருத்துரைகளை வழங்கினர்.

வீதி ஒழுங்குமுறை தொடர்பாக விழிப்புணர்வுக் கருத்துக்களை துணுககாய் காவல் பணிமனைப் பொறுபபாளர் பகீரதன், மாங்குளம் பிரதேச காவல்பணிமனைப்பொறுப்பாளா லோகநாதன்ஆகியோர் நிகழ்த்தினர்.

6.

* வட-கிழக்கு இடைக்கால நிர்வாகம் தொடர்பான பாராளுமன்ற ஒத்திவைப்பு விவாதம் ஒக்ரோபர் மாதம் முதல் வாரத தில் இடம்பெறுமெனக் கட்சித் தலைவர் களின் மாநாட்டில் இணக்கம் காணப் பட்டது.

* வெளியுறவு அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் ஜப்பானுக்கு விஜயம்.

* இந்திய அகதிமுகாமிலிருந்து படகு மூலம் தாயகம் திரும்பிய 28 அகதிகள் கச்சதீவில் அநாதரவாக விடப்பட்டனர்.

* மட்டக்களப்பில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், சிறிலங்கா இராணுவ அதிகாரிகளுக்குமிடையே நடைபெற விருந்த சந்திப்பு பிற்போடப்பட்டது.

7.

* மீனவர் மீது சிறிலங்காப் படையினர் மேற்கொள்கின்ற தொடர்தாக்குதல்கள், அச்சுறுத்தல்களை நிறுத்த வேண்டுமெனக் கோரி முல்லைத்தீவில் மாபெரும் கண் டனப்பேரணி நடைபெற்றது.



கண்டனப் பேரணி

*யாழ்ப்பாணத்தில் நாயன்மார்க்கட்டுப் பகுதியில் கழுத்து வெட்டப்பட்ட நிலையில் இளைஞன் ஒருவரின் சடலம் கண்டெடுப்பு.



சடலம் கண்டெடுப்பு

* சமாதான முயற்சிகளில் மந்தகரமான நிலைமை இருக்குமாயின் போர்நிறுத்த ஒப்பந்தத்திற்கு அபாயம் ஏற்படலாமெனப் பாராளுமன்றத்தில் இரா.சம்பந்தன் தெரிவிப்பு.

* கொள்ளைச் சம்பவத்தில் ஈடுபட்ட மோசடித் தடுப்புப்பிரிவு பொலிசார் 09பேரை கொள்ளுப்பிட்டிப் பொலிசார் கைதுசெய்தனர்.

* யாழ்.பல்கலைக்கழக ஊழியர் போராட்டத்தினால் கற்றல் செயற்பாடுகள் அனைத்தும் இடைநிறுத்தப்பட்டன.

* சீன பாதுகாப்பு உயர் அதிகாரிகள் குழு கொழும்பில் முக்கிய கலந்துரையாடல் நடத்தியது.

* வவுனியாவிலிருந்து வன்னிப் பகு திக்குச் செல்ல 03 பெண்போராளிகளுக்கு இராணுவம் தடைவிதித்தது.

8.

* மட்டக்களப்பு புல்லுமலைப்பகுதியில் அமைந்திருந்த விடுதலைப்புலிகளின் சோத னை நிலையத்தின் மீது சிறிலங்கா இராணு வத்தினர் தாக்குதல் நடத்தினர். பதில் தாக்குதலில் இரு ஆயுததாரிகள் பலி.



* சிறிலங்காவின் முப்படைகளின் தலைமை அதிகாரியாக கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயாசந்தகிரி நியமிக் கப்பட்டார்.

* ஐக்கியநாடுகள் சமாதானப் படையில் கடமையாற்றுவதற்காக கெயிட்டிற்குச் செல்லவுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் பயிற்சியை முடித்து வெளியேறினர்.

* அமெரிக்க ராஜாங்கத் திணைக்கள பயங்கரவாதத் தடுப்புப் பிரிவின் தலைமை அதிகாரி லார்ஜ் கேகொபர் பிளக் சிறிலங்கா விஜயம்.

* மட்டக்களப்பு நகரப்பகுதியில் குண்டொன்று கண்டெடுக்கப்பட்டது.

* வெள்ளவத்தையில் இடம்பெற்ற வீதிவிபத்தில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவர் பலி.

9

* தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வனை ஐக்கியநாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் சிறிலங்காவிற்கான வதிவிடப்பிரதிநிதி மினகல்பேர்மியோ சந்தித்தார்.

* மீளசமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பது குறித்து எமது விருப்பத்தை அரசியல்துறைப் பொறுப்பாளரிடம் வெளிப்படுத்தினோம் என ஐ.நா.அபிவிருத்தித்திட்ட இலங்கைக்கான பிரதிநிதி தெரிவித்தார்.

* சனாதிபதி எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவைசந்தித்து தேசிய நல்லிணக்க சபை தொடர்பாக ஆராய்ந்தார்.

*. புண்ணாலைக் கட்டுவன் பகுதியில் இளைஞன் ஒருவரின் சடலம் கண்டெடுப்பு.

*. மன்னார் கடற் பகுதியில் அத்துமீறி மீன் பிடித்தொழிலில் ஈடுபட்ட இரண்டு படகுகள் தீப்பற்றி எரிந்தன.

*. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் இலங்கைக் கான இந்தியத் தூதுவரைச் சந்தித்தனர்.

*.ஸ்கண்டினேவிய நாடுகள் சமாதான நடவடிக்கையில் ஈடுபடுவதை நிறுத்த வேண்டுமெனக் கோரி நோர்வேத் தூதரகம் முன் பிக்குகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

10.

*.இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர்கள், இருவர் அமைச்சராகவும், பிரதி அமைச்சராகவும் பதவியேற்பு.

*. தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் கனேடிய உயர்ஸ்தானிகள் வலரிரேமனைச் சந்தித்து புலிகளால் முன் வைக்கப் பட்டுள்ள இடைக்கால தன்னாட்சியின் அடிப்படையில் பேச்சுவார்த்தைகள் நடத்தவேண்டுமென வலியுறுத்தினர்.

*. வடமராட்சி கிழக்கு உடுத்துறை மகாவித்தியாலயத்திற்கு 10 கணினிகள் அன்பளிப்புச் செய்யப்பட்டன.



கணினிகள் அன்பளிப்பு

*.கச்சதீவில் அநாதரவாக இருந்த அகதிகள் நெடுந்தீவுப் பகுதிக்கு அழைத்து வரப்பட்டனர்.

*. புல்லுமலை தாக்குதல் குறித்து போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவருக்கு அரசியல்துறைப் பொறுப் பாளர் சு.ப தமிழ்ச்செல்வன் கடிதம் மூலம் கண்டனம் தெரிவிப்பு





*.லண்டனில் தமிழ் இளைஞன் ஒருவர் கொலை செய்யப்பட்ட குற்றச்சாட்டில் மற்றுமொரு தமிழ் இளைஞனுக்கு லண்டன் நீதிமன்றம் ஆயுள் தண்டனை வழங்கத் தீர்மானித்துள்ளது.

11.

* ஊர்காவற்துறையில் ஈ.பி. டி.பி உறுப்பினர் ஒருவர் இனந்தெரியாதோரின் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகிப் பலி.

*. கொட்டாஞ்சேனையில் இயங்கி வந்த தொலைக்காட்சி நிறுவனங்களை பொலிசார் முற்றுகையிட்டு கிளிநொச் சியைச் சேர்ந்த மூவரை கைதுசெய்தனர்.

* சின்னமுத்து ருபெல்லா தடுப்பு மருந்து ஏற்றல் ஆரம்பம்.



தடுப்பு மருந்து ஏற்றல்

* ஹொலிவூட் புத்தா திரைப் படத்திற்கு எதிராக இலங்கையிலுள்ள அமெரிக்கத் தூதரகம் முன் ஜாதிக ஹெல உறுமய பிக்குமார் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

*. இடைக்கால நிர்வாக யோசனையை சிங்கள மக்களும் ஆதரிக்கின்றனர் என காணாமற் போனோரின் குடும்பத்தவர் சங்கச் செயலாளர் தெரிவிப்பு.

*. கச்சத்தீவிலிருந்து அழைத்து வரப்பட்ட இந்திய அகதிகள்அவர்களது சொந்த இடத்திற்கு அனுப்பிவைக் கப்பட்டனர்.

12.

* மட்டக்களப்பிலிருந்து வருகை தந்திரந்த கேணல் ரமேஸ், கேணல் பானு உட்பட தளபதிகள் மட்டக்களப்பிற்குச் சென்றனர்.



மட்டக்களப்பு திரும்பல்

* இந்திய கடற்படைத்தளபதி வைஸ் அட்மிரல், அருண் பிரகாஷ் கொழும்பிற்கு விஜயம்

*. மட்டக்களப்பு மாவட்டத்தின் செங்கலடி பதுளை வீதியிலுள்ள புல்லு மலை யினை அண்மித்த காட்டுப் பகுதியில் சூட்டுக் காயங்களுடன் இரண்டு பேரின் சடலங்கள கண்டெடுப்பு.

*. பாதாள உலகக் குழுவைச் சேர்ந்த ஒருவர் கொழும்பில் சுட்டுக்கொலை.

*. அச்சுவேலிப் பகுதியில் குழாய் கிணற்றிற்காகத் தோண்டப்பட்ட குழியினுள் தொழிலாளி ஒருவர் புதையுண்டு மரணம்.

*. போராளிஆதித்த நிலாவின் "எங்கே மனக்கண்களைத் திறவுங்களேன்" அருமைகல்லூரிப் போராளிகளின் "முதற் பயஸ்" ஆகிய சிறுகதைத் தொகுப்புகளின் அறிமுக விழா இடம் பெற்றுள்ளது.



அறிமுக விழா

# ஐ.ம.சு.முன்னணியின் கொள்கையை நாம் ஏற்றுக் கொள்ள மாட்டோம்

## -இ.தொ.கா.வின் பா.உ.கூறுகிறார்

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் "நாடு முன்னேற" என்ற கொள்கைகளை தாம் ஏற்றுக் கொளளப் போவதில்லை என இ.தொ.காங்கிரசின் நுவரெலியா மாவட்ட எம்.பி. ஜெகதீஸ்வரன் சிங்கள நாளிதழ் ஒன்றுக்கு தெரிவித்துள்ளார்.

இடைக்கால நிர்வாக சபை தொடர்பான பேச்சுக்களை முன் னெடுப்பதே தனது பிரதான நோக் கம் என்றும் சமாதான நடவடிக்கை கள் மீண்டும் ஆரம்பிக்கப்படும் என தான் நம்புவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தோட்டப்புற மக்களை மேம் படுத்தவென 13 கோரிக்கைகளை சனாதிபதியிடம் முன்வைத்துள்ள தாகவும் அதன் மூலம் தோட்டப் புறங்களில் துரித அபிவிருத்தியை தாம் எதிர்பார்ப்பதாகவும் தெரிவித் துள்ளார். இதனிடையே கட்சியின் உறுப்பினர் பைஸர் முஸ்தபாவும் அடுத்த வாரம் கைத்தொழில் உல்லாசப் பயண,அமைச்சராகப் பதவியேற்கவிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

### பொறுப்பதிகாரிகள் இல்லை

சிறிலங்காவின் சுமார் 100 பொலிஸ் நிலையங்களில் பொறுப் பதிகாரி பதவிகளுக்கு வெற்றிடங் கள இருப்பதாக அறிவிக்கப் பட்டுள்ளது. இதன் காரணமாக குற்றச்செயல்களைக் கட்டுப்படுத் துவதில் பாரிய பிரச்சினை எதிர் நோக்கப்படுவதாகத் தெரிவிக்கப் படுகிறது (32)

# ஊழல் குற்றச்சாட்டை விசாரிக்கும் ஆணைக்குழுவை தடைசெய்ய திஸாநாயக்க தாக்கல் செய்த மனு நிராகரிப்பு

தமக்கெதிராக ஊழல் மோசடி குற்றச்சாட்டை விசாரிக்கும் ஆணைக்குழுவை தடைசெய்யு மாறு ஐ.தே.க எம்.பி திஸாநா யக்க. உயர் நீதிமன்றத்திடம் சமர்ப்பித்த றிட்மனுவை நீதி மன்றம் நிராகரித்துள்ளது. அந்த மனு விசாரிக்கப்படுவதற்கோ பிரதிவாதியை நீதிமன்றத்திற்கு அழைப்பதற்கோ ஏற்றவகையில் சமர்ப்பிக்கப்படவில்லை எனத் தீர்ப்பளித்துள்ளது.

அவருக்கெதிரான குற்றச் சாட்டு பதிலளிக்கும் வகையில் அவர் நடவடிக்கையில் ஈடுபட வேண்டும் என்பதுடன் ஆணைக் குழுவைக் கட்டுப்படுத்தக் கூடிய அதிகாரம் உயர் நீதிமன்றத்திற்குக் கிடையாது என்றும் நீதிபதி யாப்பா தெரிவித்துள்ளார். அவரின் றிட்மனு கலாநிதி சிராணி பண்டா ரநாயக்க யாப்பாராஜா பர்னாந்து ஆகி யோரடங்கிய குழு ஆராய்ந்துள்ளது.

இந்த மனு தொடர்பாக எஸ்.திஸா நாயக்கவின் சார்பில் சனாதிபதி சட்டத்தரணியான திலக் மாறப்பன கூறியிருப்பதாவது, எனது கட்சியைச் சேர்ந்த திஸாநா யக்க பிரபல அரசியல் வாதி. பொது சன ஐக்கிய முன்னணியின் அமைச் சராகக் கடமையாற்றிய போது ஐ.தே முன்னணிக்குள் இணைந்தார். அதன் பின் அவர் மீது ஊழல் மோசடி குற்றம் சாட்டப்பட்டது.

# புதிய ஊடக கலாசாரத்தை உருவாக்கப்போகிறாராம்

## - மங்கள சமரவீர கூறுகிறார்

(கொழும்பு)

மக்களின் உணர்வுகளை மதித்து புதிய ஊடகக் கலாசாரம் ஒன்றை ஏற்படுத்தப் போவதாக ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார். நாரஹென்பிட்டியில் உள்ள கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே இவ்வாறு கூறினார். அவர் அங்கு மேலும் கூறுகையில், நாட்டின் சகல ஊடகங்களும் இன்று முதல் நாட்டின் பாரம்பரியங்களையும் ஒழுக்க விழுமியங் களையும் பாதுகாக்கக் கூடிய வகையில் செயற்படுமெனவும் கூறினார்.

# நியாப்-II முல்லைத்தீவு மாவட்டம்

# மையக்கிராமத் தெரிவிற்கான விண்ணப்பம் கோரல்

முல்லைத்தீவு மாவட்டத்தில் நியாப்-IIதிட்டத்தின் கீழ் மையக் கிராமங்களின் தெரிவு உடனடியாக ஆரம்பமாகித் திட்டத் தெரிவு நடைமுறைகள் பூர்த்தியானபின் 2005 ஆம் ஆண்டு தை மாதத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட மையக்கிராமங்களின் நியாப் -II திட்ட நடவடிக்கைகள் ஆரம்பமாகவுள்ளன.

எனவே பொது அமைப்புக்கள் மூலமாக மையக்கிராமத் தெரிவுகள் தொடர்பாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவ்விண்ணப்பங்கள் அனுப்ப முதல் தங்கள் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர்களுடன் கலந்துரையாடி அவர்களின் கருத்துரையுடன் விண்ணப்பிக்கவும்.

கீழ்வரும் மாதிரிப் படிவத்தில் விண்ணப்பங்களைத் தயார் செய்து குறிப்பிட்ட மையக்கிராமங்களின் கிராமசேவை உத்தியோகத்தர் மூலமாக சம்பந்தப்பட்ட உதவி அரசாங்க அதிபர்களிடம் அவைகளை உடனடியாகக் கையளிக்கப்படல் வேண்டும். கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் பிரதேச விவசாயக் குழுக்கூட்டத்தில் உதவி அரசாங்க அதிபர்களைத் தலைவராகக் கொண்ட குழுவால் பரிசீலனை செய்யப்பட்டு, திட்டத் தெரிவு நடைமுறைகளுக்கிணங்க புள்ளியிடப்பட்டு, உதவி அரசாங்க அதிபர்கள் மூலம் இவ்வலுவலகத்திற்கு அனுப்பப்பட்டு, மாவட்ட புள்ளியிடல் மேற்கொள்ளப்பட்டு மாவட்ட தெரிவுக் குழுவிற்கு அனுப்பப்பட்டு இறுதித்தெரிவு மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையிலான மாவட்டத் தெரிவுக்குழுவால் இறுதியாக்கப்படும்.

எந்திரி.ச.கு.சிவகுமார்
பிரதித்திட்டப்பணிப்பாளர்,
முல்லைத்தீவு மாவட்டம்.

## மாதிரி விண்ணப்பப் படிவம் நியாப்-II முல்லைத்தீவு மாவட்டம்

முல்லைத்தீவு மாவட்ட ............................ மையக்கிராமத்தின் பொது அமைப்புக்களில் ஒன்றான....................................... இன் நிர்வாக உறுப்பினர்களாகிய நாம் நியாப்-II திட்டத்தின் மூலம் பெறும் மையக்கிராமத்தின் அபிவிருத்திக்காக நிதியினைப் பெறுவதற்கு இத்தால் விண்ணப்பிக்கின்றோம்.

எமது விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்பட்டு நியாப்-IIஎமக்கு நிதியுதவி வழங்கும் பட்சத்தில் அத்திட்டத்தினை கீழ்வரும் நிபந்தனைகளுடன் ஏற்பதாக உறுதியுரை வழங்குகின்றோம்.

01.திட்டத்தினால் அனுமதிக்கப்படும் நன்மைகள், கிராமத்தில்வசிக்கின்ற தேவைப்படும் குடும்பங்களுக்குக் கிடைக்கச் செய்தல்.

02.திட்ட மூலதனத்தில் இம் மையக்கிராமத்திற்கான ஒதுக்கீட்டின் 7 லிருந்து 10 வீதமான வேலைகளைப் பயனாளிகள் பங்களிப்புச் செய்தல்.

03. திட்டத்தினால் ஏற்படுத்தித் தரப்படும் சொத்துக்களைத்தொடர்ந்து செயற்படுத்தி பராமரித்து வருதலை உறுதிப்படுத்தல்.

நியாப்-II திட்டத்திலிருந்து நிதி பெறுவதற்காக மக்களின் சம்மதத்தைப் பெறுவதற்குப் பொதுக்கூட்டம் ஒன்றுகூட்டி அதில் மேற்கூறிய நிபந்தனைகளுக்கமைவாக இத்திட்டத்தில் நிதிபெறுவதற்கு மக்களின் சம்மதத்தைப் பெற்று அவர்களின் கையொப்பங்கள் அடங்கிய கூட்டறிக்கையுடனும்,கிராம சேவை உத்தியோகத்தரின் உறுதிப்பாட்டுடனும் இணைத்துள்ளோம். இந்தக்கிராமத்தை நியாப்-II எடுத்து அபிவிருத்தி செய்யுமாறு கீழ் யையொப்பம் இடப்பட்ட மேற்படி பொது அமைப்பின் நிர்வாகசபையின் முக்கிய உறுப்பினர்களாகிய நாங்கள் இவ்விண்ணப்பம் மூலம் கோருகின்றோம்.

| பெயர் | பதவி | கையொப்பம் |
|---|---|---|
| 01 ................................ | தலைவர் | .............................. |
| 02 ................................ | செயலாளர் | .............................. |
| 03 ................................ | பொருளாளர் | .............................. |

திகதி:............................

......................................

சங்கத்தின் பதிவு இலக்கமும்,
இறப்பர் முத்திரையும்

## பொது அமைப்பால் பூரணப்படுத்தி விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்க வேண்டிய நியாப் IIமையக் கிராமத்தின் ஆரம்பத் தகவல் அறிக்கை

### 01. மையக் கிராமத்தின் விபரங்கள்.

1.1) மையக் கிராமத்தின் பெயர்:..............................................
1.2) கிராமசேவகர் பிரிவு:-..............................................
1.3) உதவி அரசாங்க் அதிபர் பிரிவு: ..............................................
1.4) கமநல சேவை நிலையத்தின் பெயர்:-..............................................
1.5) மையக் கிராமத்தில் குளமிருப்பின் அதன் பெயர்:-
..............................................
1.6) குடும்ப எண்ணிக்கை:-..............................................
1.7) உள்ளூரில் இடம்பெயர்ந்த குடும்பங்களின் எண்ணிக்கை:..............................................
1.8) உள்ளூரில் இடம்பெயர்ந்து மீளவந்த குடும்பங்களின் எண்ணிக்கை:-..............................................
1.9) இத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டால் வரவிருக்கும் இடம்பெயர்ந்த குடும்பங்களின் எண்ணிக்கை:-..................
1.10) ஏனைய பிரதேசங்களில் இடம்பெயர்ந்து இக்கிராமத்திற்கு வருகை தந்த குடும்பங்களின் எண்ணிக்கை:-..................
1.11) யுத்தத்தால் பாதிக்கப்பட்ட கட்டுமானங்கள்:-
அ) வீதி இல்லை/ நடுத்தரம்/ முற்றாக
ஆ) பாடசாலை இல்லை/நடுத்தரம்/முற்றாக
இ) வீடுகள் இல்லை/நடுத்தரம்/முற்றாக
ஈ) ஏனைய கட்டுமானங்கள்
பெயா
..............................இல்லை/நடுத்தரம்/முற்றாக
..............................இல்லை/நடுத்தரம்/முற்றாக

### 02. மையக் கிராம நிலப் பயன்பாடு

2.1) நிரந்தரமாக விவசாயம் செய்யப்படும் மேட்டுநிலம் (ஏக்கர்):-..............................
2.2) குளத்திலிருந்து நீர்ப்பாசனம் பெறும் நிலம் (ஏக்கர்):-..............................
2.3) பாவனையில் இல்லாத நிலம் (ஏக்கர்):-......................
2.4) பிறதேவைகளுக்கு (கட்டடம்,கிணறுகட்ட) பயன்படுத் தக்கூடிய காணியுள்ளதா? ஆம்/ இல்லை:-
2.5) வயற்காணி உள்ளவர்களின் எண்ணிக்கை:-
அ.கிராமத்திலுள்ள உரிமையாளர்களின் எண்ணிக்கை :-..............................
ஆ.கிராமத்திலில்லாத உரிமையாளர்களின் எண்ணிக்கை :-..............................
2.6) விவசாயக் காணி உள்ளவர்களின் எண்ணிக்கை:-
அ.கிராமத்திலுள்ள உரிமையாளர்களின் எண்ணிக்கை :-..............................
ஆ.கிராமத்திலில்லாத உரிமையாளர்களின் எண்ணிக்கை :-..............................
2.7) காணிஉரிமை எதுவுமில்லாதவர்களின் எண்ணிக்கை

### 03.உட்கட்டுமான வசதிகள்

3.1) பாடசாலை உள்ளதா? ஆம் / இல்லை
3.2) பொதுக்கிணறு உள்ளதா? ஆம்/இல்லை-
ஆம் எனின் எத்தனை:-......................
3.3) பொதுமண்டபம் உள்ளதா? ஆம் / இல்லை
3.4) நீர்ப்பாசனக் குளம் உள்ளதா?ஆம் / இல்லை
3.5) சுகாதார நிலையம் உள்ளதா?ஆம் / இல்லை
3.6) பொதுச்சந்தை உள்ளதா?ஆம் / இல்லை
3.7) வீதிகளின் நிலைப்பாடு:-
நல்லநிலையிலுள்ளது/ இடைத்தர நிலையிலுள்ளது/மிகவும் மோசமானது/ புதிதாகப் போடப்படல் வேண்டும்.

### 04.கிராம அமைவிடம் (k.m)

4.1) மாவட்ட அரசாங்க அதிபர் காரியாலயத்திலிருந்து தூரம்:-
4.2) உதவி அரசாங்க அதிபர் காரியாலயத்திலிருந்து தூரம்:-
4.3) கிராம அலுவலர் அலுவலகத்திலிருந்து தூரம்:-
4.4) கிட்டவுள்ள அரச வைத்திய நிலையத்திலிருந்து தூரம்:-
4.5) கிட்டவுள்ள அரச பாடசாலையிலிருந்து தூரம்:-
4.6) கிட்டவுள்ள தபால் அலுவலகத்திலிருந்து தூரம்:-
4.7) நியாப் திட்டப் பணிமனையிலிருந்து தூரம்:-

### 05.கிராம மக்களின் பிரதான வருமானம்

5.1) மேட்டுப்பயிர்ச் செய்கையில் தங்கியுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை:-
5.2) நெற்பயிர்ச்செய்கையில் தங்கியுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை:-
5.3) ஏனைய வருமானத்தில் தங்கியுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை:-

### 06.வறுமையின் தன்மை

6.1) நிரந்தர வருமானமற்ற குடும்பங்களின் எண்ணிக்கை:-
6.2) யுத்தப்பாதிப்புக்களினால் பெண்களின் தலைமையிலிருக்கும் குடும்பங்களின் எண்ணிக்கை:-
6.3) யுத்தத்தால் பாதிக்கப்பட்ட ஊனமுற்ற அங்கத்தவர்களை யுடைய குடும்பங்களின் எண்ணிக்கை:-
6.4) யுத்தப்பாதிப்புக்களினால் அநாதையாகவுள்ளவர்களின் எண்ணிக்கை:-
6.5) கிராமத்தில் காணியற்ற தொழிலாளர்கள் எண்ணிக்கை:-
6.6) நிரந்தர வீடில்லாத குடும்பங்களின் எண்ணிக்கை:-

### 07.மிகவும் பிரயோசனமான கிராமத்திலுள்ள நீர்ப்பாசனத் திட்டத்தின் விபரங்கள் (இருப்பின் மட்டும்)

7.1) குளம்/ அணைக்கட்டு/ குட்டையின் பெயர்:-
7.2) அதற்குச்செல்லும் பாதையின் தன்மை:-
7.3) கிராமத்திலிருந்து அதன் தூரம்:-
7.4) அதன் தற்போதைய நிலைமை:-
1) இயங்குகின்றதா:- ஆம்/ இல்லை
2) உடைப்பெடுத்துள்ளதா:-ஆம்/ இல்லை
3) கூடிய புனரமைப்புச் செய்யப்படல் வேண்டுமா:- ஆம்/இல்லை
7.5) பயிர் செய்யப்படும் காணியின் அளவு:-
1) பெரும்போகம்:-................ 2) சிறுபோகம்:-............................
7.6 கடந்த ஆண்டு பயிர்செய்திருப்பின் அதன் காணியின் அளவு:-
1) பெரும் போகம்:-.................. 2) சிறுபோகம்:- ......................
7.7) 1. பயிர்ச்செய்கை நடவடிக்கையில் ஈடுபடும் குடும்ப எண்ணிக்கை:-
2. பயிர்ச்செய்கை நடவடிக்கைக்கு இத்திட்டத்திலிருந்து நீர்பெறும் குடும்பங்களின் எண்ணிக்கை:-................
3. பயிர்ச்செய்கை நடவடிக்கைக்கு இத்திட்டத்தை விடவேறு இடத்திலிருந்து நீர்பெறும் குடும்ப எண்ணிக்கை:-............
4) காணியற்ற, ஆனால் இக் குளத்திலிருந்து நீர் பெறும் குடும்பங்களின் எண்ணிக்கை:-

### 08.அபிவிருத்தித் திட்டங்கள்

8.1) இக் கிராமம் வேறு ஏதேனும் நிறுவனங்களுக்கூடாக தற்பொழுது அபிவிருத்தி செய்யப்படுகின்றதா?................
8.2) 10வருடங்களுக்காக மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திச் செயற்பாடுகள்:-

| நிறுவனம் | செயற்பாடுகள் |
|---|---|
| | |

8.3) திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் கிராமிய பொது நிறுவனங்களுக்கு அனுபவம் உண்டா? ஆம்/ இல்லை
8.4) கொடுக்கப்பட்ட திட்ட நடவடிக்கை இலக்கை குறிப்பிட்ட நாளில் முடிக்க தடைகள் உண்டா? ஆம்/ இல்லை

### 09. வேறு தகவல்கள்

9.1) அழிவுகள் விஸ்தீரணம் (மொத்தமாக அல்லது குறைவாக):-
..............................................................................
9.2) நெற்செய்கை மேற்கொண்ட விஸ்தீரணம்:-............................
சென்ற சிறுபோகம்:-.............. சென்ற காலபோகம்:-...............
9.3) சென்றவருடம் செய்கை பண்ணாவிடில், எவ்வளவு காலம் செய்கை பண்ணப்படாமல் கைவிடப்பட்டது:-.............................
மாதம்:-................................ வருடம்:-................................
9.4) மையக்கிராமத்திலிருந்து குளம் எவ்வளவு தூரம்..........Km
9.5) மைய்க்கிராமத்திலிருந்து குளத்துக்குப் பாதை,பாதையின் வகை:-............................... தூரம்:-....................................

### கிராம சேவையாளரது சிபார்சு

**எனக்குத் தெரிந்த அறிவிற்கு மேல்தரப்பட்ட தகவல்கள் யாவும் உண்மையானதும், சரியானதும், என சிபார்சு செய்கிறேன்.**

ஒப்பம்:----------------------------------------- திகதி:-----------------------------------

பிரதித்திட்டப் பணிப்பாளர்
நியாப், முல்லைத்தீவு மாவட்டம்,

இவ் விண்ணப்பங்களுக்கு நியாப் -II நடைமுறைகளுக்கிணங்க புள்ளியீடப்பட்டபோது இக்கிராமம் பெற்ற புள்ளிகள்.......... ஆகும். இக்கிராமம் எமது தெரிவுக்குழுவின் நிரற் படுத்தலில்........... ஆம் இடத்தைப் பெற்றுள்ளது என்பதை உறுதிப்படுத்துகிறேன்.

திகதி:- ........................................ (சி.10210) பிரதேச செயலாளர்:-...........................................

# ஆதவனின் அனுபவப் பகிர்வுகள்

## பகுதி 12

**என் அன்பு வாசகர்களே!**

வாழ்க்கை இப்படித்தான் நகர்கிறது. சில வேளைகளில் நாமே வாழ்க்கையை நகர்த்த வேண்டியிருக்கிறது.

வாழ்க்கை ஒரு பொழுதும் நமக்காகக் காத்திருக்கப்போவதில்லை.

வாழ்வென்பது.... எமக்காகவே விரிந்திருக்கிறது சோலைகளும்..... பாலைவனங்களுமாய் வாழ்வு விரிந்திருப்பது சில சமயங்களில் வாழ்வு எப்படி இருக்கிறது என்று எமக்கே புரிவதில்லை.... எனச் சொல்ல வாக்கும் எல்லாமுமே சூனியமாய்..... ஒரு வெட்டவெளியில் தனிமையில் இருப்பது போன்ற உணர்வு வருவதில்லையா?

* * * *

என்னடா இவன்?

தத்துவம் பேச ஆரம்பித்து விட்டானே என்று என் அன்பு வாசகர்கள் குழம்பிக் கொள்ள வேண்டாம்

* * * *

அந்தக் காலம்...... அந்தச் சூழல் அப்படி ஒரு முன்பின் தெரியாத ஒரு BAR... என் முன்னே ஒரு நித்தியக் குடிகாரன் (அவனது நாட்டின் தேசியக் 'குடி' என்ன என்பதில் எனக்கொரு ஆர்வம் அவ்வளவுதான்) 'அக்ரோபலிஸின்' முன்னுள்ள BAR இல் அவன் ஏன் கைகொட்டிச் சிரிக்க வேண்டும்? என்னிடம் நிறையவே அமெரிக்க டொலர்கள் இருந்தன.

அவன் நினைத்திருக்கக் கூடும்.... "அவனை நான் வாங்கித் தரச்சொல்கிறேன்" என,எனக்கு இன்னமுந்தான் புரியவில்லை? ஏன் அவன் சிரித்தான்?

* * *

கிரேக்க நகரத்தில்

ஒரு முறைமை இருக்கிறது. வந்தவன் யாரெனத் தெரியாத போதிலும் அவனை 'வா' என அழைக்கும் பண்பு. சிரித்தவன்.... என்னை தன்னருகே அழைத்தான்.

அவர்கள் யாரையும் வரவேற்பார்கள்

ஆனால்,

வந்தவன் யாரென- துரிதத்தில் உணர்ந்தும் கொள்வார்கள்.

* * * *

நான் அவனுடன் உறவாடினேன். அவனது தேசிய மதுவை அருந்தினேன், எனது 'டொலர்' கொஞ்சம் சிலவழித்தேன். அவனுக்கு போதை கொஞ்சம் கூடிவிட்டது. போதையில்... அவன் எனக்கு நிறையக் கற்பித்தான்.

அவன் கற்பித்தவைகள்:

1) அதிகம் குடிக்காதே
2)வாழ்க்கை வாழ்வதற்கே.
3) கலையை.... இயற்கையை மதி!

அவன் எனது 'குரு' வானான். அவனை அழைத்துக் கொண்டு அவன் தேசத்தைச் சுற்றிப் பார்க்கலாம் எனும் உணர்வு, எனக்குத் தோன்றிற்று

''உனக்கான எல்லாச் செலவுகளும் நானே பொறுப்பேற்கிறேன். எனக்கு இந்த தீவுகளைச் சுற்றிக்காட்டு" என்றேன்.

என்னுடன் வரச் சம்மதித்தான் அவன்.

* * * *

நாங்கள் PARAS எனும் தீவை நோக்கிப் பயணித்துக் கொண்டிருக்கிறோம்.

கிரேக்க நாட்டில் பல தீவுகளுண்டு.

அந்த சமுத்திரம்...
அந்த அலைகள்...
அந்த நீலம்...
மேலேயும் நீலம்...
கீழேயும் நீலம்...
மேலே பறக்கும் 'மோவா' பறவைகள் ஆனந்தம்,
அற்புதம்,
சமுத்திரங்கள் பலவகையுண்டு ஆனால் இது!!!.....?

* * * *

நாகரிகங்கள் பலவற்றை உள்ளடக்கிய சமுத்திரம்.

'துருக்கி' எனப்படும் முஸ்லிம் நாகரிகத்திற்கும்,

'கிரேக்கம்' எனப்படும் அறிவு நாகரிகத்திற்கும் இடைப்பட்ட சமுத்திரம்.

ஒரு தடவை அந்தக் கப்பலில் இருந்தபடியே (அது ஒரு கப்பல்தான். அவ்வளவு நீளம் அது.)

அந்தச் சமுத்திரத்தைத் தொட்டுப்பார்த்தேன்.

* * * *

எத்தனை... எத்தனை யுத்தங்களைக் கடந்த கடல் அது.

இந்தச் சமுத்திரங்களின் கீழ் எத்தனை நாகரிகம் புதையுண்டு இருத்தல் கூடும்....?

'கப்பல் கட்டும்' வேலையில் இன்று வரை கிரேக்கம் முதன்மை வகிக்கிறது....

இதன் மாயம் என்ன?

எத்தனை ஆயிரம் போர்கள்.....

எத்தனை ஆயிரம் Ego (தலைக்கனம்)கள்

இந்தக் கடலின்...ஆழத்தினுள்ளே....
-மகா அலெக்சாண்டர்-எங்கே?
சோக்கிரட்டிஸ்-எங்கே?
-'தேமிஸ்' (நீதிதேவதை) எங்கே...?

உலகஅழகி 'கிளியோப்பெட்ரா' எங்கே...?

இதே கடலில் தான்.... இவர்கள் வாழ்வு அமிழ்ந்து போயிற்று.

அழிந்து போன இவர்கள் வாழ்வைத்தான் இன்று வரை சமுத்திரவியலாளர்கள் தேடிக் கொண்டிருக்கிறார்கள்.

அந்தக் கடலில் என்கை நனைகிறது. இரத்தம் தோய்ந்த கடல் அது. இலட்சியங்களால் மோதுகின்ற பேரலையின் சமுத்திரம் அது.

உலக நாகரிகத்தை உணர்த்தி விட்டு உலகப் போரை நடத்தி விட்டு இன்னும் இன்னும்.....

மூன்றாம், நாலாம் ஐந்தாம் உலக யுகத்தமே... வா;

உன்னைக்கூட என்னால் தாங்க முடியும்

என்பது போல...

அந்தச் சமுத்திரம் பொலிவுடன் கிடந்தது.அதில் நான் கை நனைத்தேன்.

* * * *

என் அன்பு வாசகர்களே...

நான் அரசியல் பேசவே மாட்டேன். உலகப் பேரழகி 'கிளியோப்பெட்ரா' ஏன் அமிழ்ந்து போனாள்......?

(அடுத்த வாரம்)

---

# சாவு அறிவித்தல்



**பாலசுப்பிரமணியம் விமலச்சந்திரன் (ரூபன்)**

பூநகரி நல்லூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பாலசுப்பிரமணியம் விமலச்சந்திரன் (ரூபன்) என்பவர் 13.09.2004 ஆம் திகதி வாகன விபத்தில் அகால மரணமானார். அன்னார் காலம் சென்ற பாலசுப்பிரமணியத்தினதும் திருமதி. பாலசுப்பிரமணியத்தினதும் அன்பு மகனும் ரவிச்சந்திரன், பாலச்சந்திரன், சசிகரன், ஜீவமலர், வசந்தமலர், யோகமலர், சொற்பனா ஆகியோரின் சகோதரரும் ஆவார். அன்னாரின் ஈமக் கிரியைகள் அன்னாரது இல்லத்தில் 15.09.2004 ஆம் காலை 10.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பூநகரி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

நல்லூர்,
பூநகரி,

(5105)

தகவல்,
சசி(மைத்துனர்).

---

# வன்னி பால்சேகரிப்பு நிலையம் மாங்குளம்

## முகாமையாளர் விடுக்கும் அறிவித்தல்

**03.09.2004முதல் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டபால் சேகரிப்பு சேவை 15.09.2004 தொடக்கம் மீண்டும் நடைபெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறார்.**

**குறிப்பு:- ஊர்தி மூலமான சேகரிப்பு தொடர்ந்தும் நடைபெறமாட்டாது என்பதை அறியத்தருகின்றார்.**

ச.செங்கலடி,
முகாமையாளர்.

(சி.5101)

---

*நெடுஞ்சாலைகள் அமைச்சு*
*போரினால் பாதிக்கப்பட்ட பிரதேச புனரமைப்புத் திட்டம்(காரப்)*
*துரித வீதி பராமரிப்பு நிகழ்ச்சி*
*ஆசிய அபிருவித்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்டது*
*"ஆஅவ" கடன் இல.2043/2044* **SRI(SF)**

# கேள்விப் பத்திரம் கோரல்

## குடிசார் வேலைகளைப் பெறுதல்

01) போரினால் பாதிக்கப்பட்டபிரதேச புனரமைப்புத்திட்டம் (CAARP)ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து (ADB) கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளதுடன், கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள குடிசார் வேலைக்கு ஒப்பந்தத்தின் கீழ் தகுதி வாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக் கடனின் வரும்படிகளின் பகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

02) இதன் பின்னர் தொழில் தருனராக குறிப்பிடப்படும் CAARP கருத்திட்டப் பணிப்பாளர் தலைவர், திட்ட கேள்விச் சபை, நெடுஞ்சாலைகள் அமைச்சு, தொழில் தருனராக செயற்படுவார். தற்பொழுது பின்வரும் வேலைக்கு முத்திரை பொறிக்கப்பட்ட கேள்விப்பத்திரங்கள் தகுதி வாய்ந்த ஒப்பந்தக்காரரிடமிருந்து கோரப்படுகின்றன.

**வேலைத்திட்டம்**

| (இல) | ஒப்பந்த அடையாள இல | ஒப்பந்தத்தின் பெயர் | குறைந்தளவுICTAD பதிவு தேவை | கேள்விப்பத்திர பாதுகாப்பு |
|---|---|---|---|---|
| 01 | PTB/CARRP/01 | கண்டி, யாழ்ப்பாணம் வீதியின் (A-9) (Km 193+500 to km 290+500 துரிதமான பராமரிப்பு (ஓமந்தை இருந்து முகமாலை வரை. | m6 அல்லது அதற்கு மேல் (வீதிகளும், பாலங்களும்) | 40,000.00 |

03) பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தக் காரர்களுக்கும் கூறுவிலையீடல் திறந்துள்ளது.

i. நிர்மாணப் பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்தக் காரர் பதிவு, தரப்படுத்தல் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்தக்காரர்பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

ii.இலங்கை தேசிய நிர்மாண ஒப்பந்தக் கரார் சங்கத்தின் (NCASL) உறுப்பினராக இருக்க வேண்டும். கடந்த ஐந்து வருடத்தினுள் ஆகக் குறைந்த, இரு ஒத்ததன்மையிலான ஒப்பந்தங்களை திருப்திகரமாக முடித்த துடன்,

iii.கடந்த ஐந்து வருடங்களில் மேற்கொள்ளப்பட்ட வேலையில் திருப்திகரமான சாதனையை கொண்டிருத்தல் வேண்டும். இது வாடிக்கையாளரிடமிருந்து அத்துடன் அல்லது உசாவலர்களிடமிருந்து சான்றுப் பத்திரங்களின் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். இக்காலத்தின் போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழு நிரலொன்று வழங்கப்பட வேண்டும்.

iv. (ICTAD) வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலைகளை பொறுப்பேற்பவர் போதிய ளவு ஒப்பந்த ஆற்றலைக் கொண்டிருக்க வேண்டும்.

v. மோசடியான, அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்ற வேலைச் செயற்றிறனுக்கு தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் விளங்கக்கூடாது.

vi.ஒப்பந்த ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தக்காரரின் புதுப்பிக்கப்பட்ட பதிவுப்புத்தகத்தை சமர்ப்பிக்கக் கூடியவராக இருக்க வேண்டும்.

04) கேள்விப்பத்திரம் மற்றும் கேள்விப்பத்திர ஆவணம் பரிசீலனை சம்பந்தமான மேலதிக தகவல்களுக்கு திட்டப் பணிப்பாளா, (PUM-RNIP/CAARP)) திட்டக்காரியாலயம், பெருந்தெருக்கள் அமைச்சு, 3ஆவது மாடி "செத்திரிபாய"பத்தரமுல்லை என்ற முகவரிக்கு தொலைபேசி இல.011 – 2889082 அல்லது பிரதித் திட்டப்பணிப்பாளர் (PUM-RNIP/CAARP) RDA வதிவிடக் கோட்டம்" காரப் திட்டப் பணிமனை கண்டி வீதி,வவுனியா தொலைபேசி இல.024 – 2221458 க்கு தொடர்பு கொள்க.

05) ஒப்பந்த ஆவணங்களை 16 செப்ரெம்பர் 2004 இலிருந்து 30 செப்ரெம்பர்2004 முற்பகல் 9.30 இலிருந்து பிற்பகல் 3.00 மணிவரை வேலைநாட்களில் மேற்படி அலுவலகங்களில் ரூபா ஆயிரத்து ஐந்நூறு(1500) மீளளிக்கப்படாத கட்டணத்தின் கொடுப்பனவு மீது கொள்வனவு செய்யலாம்.

06) முன் கூட்டிய ஒப்பந்தக் கூட்டமொன்று 24 செப்ரெம்பர் 2004முற்பகல் 10.00 மணிக்கு வவுனியாவிலுள்ள திட்டக்கிளைக் காரியாலயத்தில் நடைபெறும்.

07) கேள்வி கோருவோர் முன் – தகுதிக்கு அவசியமான ஆவணத்தையும், முத்திரை பொறிக்கப்பட்ட இரு உறைகளில் புறம்பாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலையீடப்பட்ட கேள்விகளையும் கொண்டிருக்க வேண்டும்.

08) அந்தந்த வேலைகளுக்குரிய ஒப்பந்தப் பிணைமுறிகளுடன் முத்திரை பொறிக்கப்பட்ட கேள்விகள், பிரதித்திட்டப் பணிப்பாளர் (PUM-RNIP-CAARP) வீதி அபிவிருத்தி அதிகார சபை, "வதிவிடக் கோட்டம்"காரப் திட்டப் பணிமனை, கண்டிவீதி, வவுனியா என்ற முகவரிக்கு 04 ஒக்ரோபர் 2004 பி.ப. 2.00 மணிக்கு முன்னர் கிடைக்க அனுப்பப்பட வேண்டும். ஊடனடியாக கேள்விகள் திறக்கப்படும். கேள்விகோருவோர் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதி நிதிகள் சமுகமளிக்க முடியும்.

09) கேள்விகள் தயாரிப்புக்கு அல்லது ஒப்படைப்புக்கு கேள்வி கோருவோருக்கு ஏற்பாடும் ஏதாவது ஆகு செலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்கு தொழில்தருனர் பொறுப்பாகமாட்டார்.

எஸ் மெய்கண்டான்,
தலைவர், திட்ட கேள்விசபை,
நெடுஞ்சாலைகள் அமைச்சு,
(PUM-RNIP CAARP)
"செத்சிரிபாய"பத்தரமுல்லை.


(5048)

ICC CHAMPIONS TROPHY ENGLAND 2004

## சற்றே பரபரப்பான போட்டியில்

International Cricket Council

# சிறிலங்காவுக்கு 4 விக்கெட் வெற்றி



ஐ.சி.சி. மினி உலகக்கிண்ணப் போட்டித் தொடரின் நேற்றைய போட்டியில் சிம்பாப்வே அணியை எதிர்கொண்ட சிறிலங்கா அணி 4 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

ஓவல் மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற சிறிலங்கா அணி சிம்பாப்வே அணியை துடுப்பெடுத்தாட அழைத்தது.


முதலில் துடுப்பெடுத்தாடிய சிம்பாப்வே அணியின் ஓட்ட எண்ணிக்கை 23 ஆக இருந்தபோது மக்சிக் கனேரியின் விக்கெட்டை இழந்தது. தொடர்ந்து அணியின் எண்ணிக்கை 43ஆக இருக்கும் போது இரண்டாவது விக்கெட்டையும், 61இல் மூன்றாவது விக்கெட்டையும், 76,85,120 ஓட்டங்களுக்கு ஆறு விக்கெட்டுக்களை இழந்த சிப்பாப்வே 7வது விக்கெட்டுக்காக இணைந்த பன்னியங்கரவும், உட்சயா ஜோடியாரும் எதிர்பாராத வகையில் ஓட்ட எண்ணிக்கையை அதிகரித்து. எதிரணிக்கு நெருக்கடியை ஏற்படுத்தியதுடன் இப்போட்டியில் சிறிலங்காவுக்கு போடு... வேண்டிய ஓட்ட எண்ணிக்கை ஒன்றையும் வழங்கியது.

49.1 ஓவரில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து, 191 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் சிக்கும்பரா 57ஓட்டங்களையும், உட்சயா 31 ஓட்டங்களையும் அதிகபட்சமாக பெற்றனர்.

பந்துவீச்சில் சொய்சா, மஹ்ரூப்தலா 3 விக்கெட்டுக்களையும் சந்தன 2 விக்கெட்டையும் ஜெயசூரியா, வாஸ் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு 192 ஓட்டங்களைப்பெற்றால் வெற்றியென்ற நிலையில் ஆடுகளம் நுழைந்த சிறிலங்காவுக்கு ஆரம்பத்திலேயே அதிர்ச்சி 4 ஓட்டங்களுக்கு குணவர்த்தனவின் விக்கெட்டை இழந்ததுடன் அணி 10 ஓட்டங்களாக இருக்கும்போது





ஜெயசூரியாவை இழந்தது.

இதனையடுத்து சிம்பாப்வே பெற்ற 191 ஓட்டங்கள் சிறிலங்காவுக்கு ஓரளவு சவால் மிகு வெற்றி இலக்காக மாறியது.

தொடர்ந்து தட்டுத்தடுமாறிய சிறிலங்கா 6 விக்கெட்டுக்களை இழந்து 43.5 ஓவரில் வெற்றி இலக்கை அடைந்தது.

துடுப்பாட்டத்தில் அத்தப்பத்து 43, ஜெயவர்த்தன 36, டில்சான் ஆட்டமிழக்காது 38 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் சிக்கும்பரா 3 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

போட்டியின் சிறப்பாட்டக்காரராக துடுப்பாட்டத்திலும், பந்துவீச்சிலும் சிறப்பாக பிரகாசித்த சிம்பாப்வே வீரர் சிக்கும்பரா தெரிவானார்.

## பாகிஸ்தானுக்கு சாதகமானதொடர்

### வசீம் அக்ரம்




பாகிஸ்தானுக்கு இது ஒரு சாதகமான தொடர். இம்முறை கோப்பையைக் கைப்பற்றும் வாய்ப்புக்கள் உள்ள அணிகளுள் பாகிஸ்தானும் ஒன்று என பாகிஸ்தானின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் வசீம் அக்ரம் தெரிவித்துள்ளார். இளம் வீரர்கள்தான் அந்த அணியின் பலம். குறிப்பாக யாசிர் ஹமீத் கவனிக்கப்பட வேண்டிய வீரர் இவர் என்று ஏற்கனவே நான் சொல்லியிருக்கிறேன். இந்தத் தொடரில் இவரது ஆட்டத்தைக் கவனிக்கலாம்.

பாகிஸ்தான் அணிக்கு நிஜமான சவால் என்றால் 19ஆம் திகதி நடக்கும் இந்தியாவுக்கு எதிரான போட்டிதான் அரையிறுதிக்கு யார் செல்வது என்பதைத் தீர்மானிக்கும் ஆட்டம் அது. தனிப்பட்ட முறையில் என்னைக் கேட்டால் பாகிஸ்தானுக்கு வாய்ப்புகள் சற்று அதிகம் என்பேன் ஆனாலும் அன்றைய திகதியில் இரு அணி வீரர்களின் ஆட்டத்தைப் பொறுத்தே முடிவுகள் இருக்கும். அரையிறுதிக்கு வந்து விட்டால் போதும் சம்பியன் பட்டம் ஜெயிக்க சாதகமான சூழல் பாகிஸ்தானுக்கு இருக்கிறது. உல்மார் பயிற்சியில் பாகிஸ்தான் அணியின் இளம் வீரர்கள் அப்படி ஒரு சந்தர்ப்பத்திற்காகத்தான் காத்திருக்கிறார்கள் என்றார் அவர்.

## கங்குலி, பதானுக்கு ஐ.சி.சி கண்டனம்

## ஒப்பந்தத்தை மீறி விளம்பரத்தில் நடிப்பதா?





ஒப்பந்தத்தை மீறி விளம்பரப் படத்தில் நடித்த இந்திய கிரிக்கெட் வீரர்கள் கங்குலி மற்றும் பதானுக்கு ஐ.சி.சி கண்டனம் தெரிவித்துள்ளது. கிரிக்கெட் போட்டி நடக்கும் காலகட்டத்திலோ அல்லது போட்டி தொடங்குவதற்கு முன்னும், பின்னும் 45 நாட்கள் வீரர்கள் எந்தவித விளம்பரப் படங்களிலும் நடிக்கக்கூடாது என்றும், விளம்பர லோகோக்கள் எதையும் பயன்படுத்தக் கூடாது என்றும் ஐ.சி.சி ஏற்கனவே தடைவிதித்துள்ளது. இந்தத் தடையை தற்போது இந்தியஅணி கப்டன் கங்குலியும், இளம்வேகப் பந்துவீச்சாளர் இர்பான் பதானும் மீறியுள்ளனர்.

போட்டி நடக்கும் போது தனியார் செல்போன் விளம்பரம் ஒன்றில் கங்குலியும், பதானும் நடித்துள்ளனர். இதில் என்ன பிரச்சினை என்றால் ஐ.சி.சி வேறொரு தனியார் செல்போன் நிறுவனத்தை ஸ்பான்சராக ஒப்பந்தம் செய்துள்ளது. கங்குலி, பதான் நடித்துள்ள விளம்பரமோ வேறொரு தனியார் செல்போன் நிறுவனத்துக்காக ஆகும். இது ஒரு பிரச்சினை, விதிமுறையை மீறி விளம்பரத்தில் நடித்தது மற்றொரு பிரச்சினையாகும்.

கங்குலி, பதானின் இந்தச் செயலுக்கு சர்வதேச கிரிக்கெட் கவுன்சில்(ஐ.சி.சி) கண்டனம் தெரிவித்துள்ளது. இவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் இந்திய கிரிக்கெட் சபைக்கு எழுதியுள்ள கடிதத்தில் ஐ.சி.சி தெரிவித்துள்ளது.




## பாகிஸ்தான் பயிற்றுவிப்பாளர் வூல்மர் கிரிக்கெட்டின் உறுதியான மனிதர்

### மாலிக்



இங்கிலாந்தின் துடுப்பாட்டக்காரரான வூல்மர் கொடுக்கப்பட்ட வேலைகளை உறுதியுடன் முடிக்கும் உறுதியானவர் என ஒப்புக்கொண்டுள்ளார். பாகிஸ்தானின் சகலதுறை வீரர் மாலிக்.

எமக்கிடையே சில பிரச்சினைகள் இருந்த போதிலும் அதில் விடயம் எதுவும் இல்லையெனவும் நாம் பொப்வூல்மரிடம் சென்று இது குறித்து கேட்க முடியும் என்றும் மாலிக் பி.பி.சி. விளையாட்டுப் பிரிவிற்கும் தெரிவித்துள்ளார்.

"அவர் நன்றாகக் கற்பிக்கிறார் அத்துடன் எப்போதும் அவர் எங்களுக்காகவே உள்ளார். உலகிலேயே அதிகதரம் வாய்ந்த பயிற்றுவிப்பாளர் பொப்வூல்மரே" என்றும் மாலிக் கூறியுள்ளார்.

அத்துடன் நான் சிக்ஸர் அடித்துக்கொண்டிருந்தபோது பொப் என்னிடம் வந்து அது ஆறு அல்ல மூன்றுதான் எனக் கூறியதையும் மாலிக் ஞாபகப்படுத்தியுள்ளார். இது குறித்து ஏதாவது பிரச்சினை இருக்கிறதா என அவர் என்னை உண்மையாகவே கேட்டார் நான் இல்லை என்றேன் நான் இப்போதும் அவர் மீது அதிக நம்பிக்கை கொண்டுள்ள ஒரு விளையாட்டு வீரனாகவே உள்ளேன்.

முதல் 15 ஓவர்களிலும் நான் விளையாடிக் கொண்டிருக்கின்றமையால் எனது அடிகளை போடுவதற்கே விரும்புகிறேன்" என்றும் மாலிக் தெரிவித்துள்ளார். மாலிக் 76 ஒரு நாள் மற்றும் ஐந்து டெஸ்ட் போட்டிகளில் தோன்றியவர் மாலிக் ஆசியக் கிண்ணத்தில் இந்தியாவிற்கு எதிரான போட்டியில் 127 பந்துகளில் 147 ஓட்டங்களைப் பெற்று முன்னேற்றம் கண்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## ஒருநாள் தரவரிசையில் முதலிடத்தில்

## மத்யூ ஹெயிடன், சமிந்தவாஸ்



சமிந்தவாஸ்

ஒரு நாள் கிரிக்கெட் தரவரிசைப் பட்டியலில் துடுப்பாட்டத்தில் அவுஸ்திரேலியாவின் மத்யூ ஹெடனும் பந்துவீச்சில் சமித்தவாசும் முதலிடங்களைப் பெற்றுள்ளனர் சாம்சங் கிரிக்கெட் தரவரிசைப் பட்டியல் நேற்று முன்தினம் சிறிலங்காவில் வெளியிடப்பட்டது. இதில் ஒரு நாள் போட்டிகளில் ஹைடன் 86 புள்ளிகளுடன் முதலிடம் பெறுகிறார். இவர் கடந்த 14 போட்டிகளில் 597 ஓட்டங்கள் எடுத்துள்ளார். சச்சின் 80 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்துக்கு பின்தங்கினார். கடந்த 15 போட்டிகளில் சச்சின் 537ஓட்டங்களை மட்டுமே எடுத்துள்ளார். இப்பட்டியலில் இலங்யின் சங்கக்கார 78 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்தில் உள்ளார்.



மத்யூ ஹெடன்

பந்துவீச்சில் இலங்கையின் வாஸ் 150 புள்ளிகளுடன் முதலிடம் வகிக்கிறார் அவஸ்திரேலியாவின் கில்லஸ்பி (144 புள்ளி) இலங்கையின் முரளிதரன் (141 புள்ளி) முறையே இரண்டாம், மூன்றாம் இடத்தில் உள்ளனர். பதான் 126 புள்ளிகளுடன் 6ஆவது இடத்தில் உள்ளார்.

## எது கடைசிப் போட்டி என்பது எனக்கே தெரியாது~ பெடரர்



நினைத்ததைச் சாதித்தேன். இதற்கு மேல் ஆசைப்படவில்லை. மிகவும் கடினமான விளையாட்டு டென்னிஸ். அதனாலேயே ஒவ்வொரு போட்டியிலும் பட்டம் வெல்லும்போது பெரிதும் உவகை கொள்கின்றேன். ஆனால், எது கடைசிப் போட்டி என்பது எனக்கே தெரியாது என்றார் வெற்றிக்குப் பின் பெடரர். என்னைப் பொறுத்த வரை எனது மிகப் பெரிய கனவாக யு.எஸ். ஓபன் பட்டத்தை நினைக்கவில்லை. ஆனால், வெல்ல வேண்டும் என நினைத்தேன். தற்போது சாதித்துள்ளேன். ஆனால், அவ் வெற்றியை எளிதாக நம்ப முடியவில்லை. ஒவ்வொரு சீசனின் முடிவில்தான் பழையதை திரும்பிப் பார்ப்பேன். அப்போது எப்படி இந்த வெற்றிகள் சாத்தியமாயின என பிரமிப்படைவேன் என்றார் 23 வயதாகும் பெடரர். 1995இல் அமெரிக்க வீரர் பீட் சாம்ப்ராஸ் மட்டுமே விம்பிள் டன் யு.எஸ்.ஓபன் ஆகிய கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை அடுத்தடுத்து கைப்பற்றியுள்ளார். அவருக்குப் பிறகு அந்தப் பெருமையை ரோஜர் பெடரர் பெற்றுள்ளார்.

## வடக்கு–கிழக்கு மகளிர் கால்பந்து அணிக்கு தேசிய விளையாட்டுப் போட்டியில் வெண்கலம்


பதுளையில் நடைபெற்ற 30 ஆவது தேசிய விளையாட்டுப் போட்டியில் வடக்கு-கிழக்கு மாகாண மகளிர் கால்பந்து அணி மூன்றாவது இடத்தைப்பெற்று வெண்கலப்பதக்கத்தை சுவீகரித்து நேற்று முன்தினம் கிளிநொச்சி வந்தடைந்தது. இவ் அணிக்கு அரச செயலகத்தில் அரச அதிபர் இராசநாயகம் தலைமையில் கௌரவிப்பும், பரிசளிப்பு விழாவும் நடைபெற்றது.

கிளிநொச்சி, யாழ்ப்பாணம், திருகோணமலை மாவட்ட வீராங்கனைகள் அடங்கலாக 20 பேர் அங்கம் வகித்தனர். முதலாவது போட்டி தென்மாகாணத்துடன் நடைபெற்றது. இதில் 14-0 என்ற கோல் எண்ணிக்கையில் வெற்றி பெற்று அரையிறுதிக்கு தெரிவான வடக்கு கிழக்கு மாகாண அணி அரையிறுதிப் போட்டி யில் ஊவாமாகாண அணிக்கு எதிராக 1-3 என்ற கோல் எண்ணிக்கையில் தோற்றுப்போனது.

இதனை அடுத்து மூன்றாமிடத்துக்கான போட்டியில் மேல்மாகாண அணியை 2-0 என்ற கோல் எண்ணிக்கையில் வெற்றி பெற்று வெண்கலப்பதக்கத்தை சுவீகரித்தது நிலமகள் இரண்டு கோல்களையும் போட்டார். இப்போட்டியில் பெறப்பட்ட அனைத்து கோல்களும் கிளிநொச்சி மாவட்ட வீராங்கனைகளால் பெறப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இப்போட்டிக்கான தயார்படுத்தல் பயிற்சிகளை பூநகரி விளையாட்டு உத்தியோகத்தர் கலாதரன் வழங்கியதுடன் மாவட்ட விளையாட்டு அதிகாரி கனகராசா செல்வி. சி.மனோன்மணி ஆகியோர் காப்பாளராக சென்றிருந்தனர்.





## சிந்தனைக்கு

விடுதலைப் போராட்டம் என்பது மக்கள் போராட்டம் . பரந்துபட்ட வெகு சனங்கள் ஒன்று திரண்டு, ஒரு ஐக்கிய தேசமாக எழுச்சி கொண்டு போராட்டத்தில் பங்களித்தால்தான் எமக்கு வெற்றி நிச்சயம்.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 15-09-2004
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் Daily@ eezhanatham. com

## தவறான மதிப்பீடு!

உலகில் பலம் பொருந்திய வல்லரசுகளும் உள்ளன பல வீனமான அரசுகளும் உள்ளன அதேபோன்றே ஏழ்மையாலும், வறுமையாலும் வாடும் நாடுகளும் உண்டு. செல்வச் செழிப்பாலும் உபரியால் கொழுத்த நாடுகளும் உண்டு. ஆனால் ஒரு பிரச்சினை தொடர்பாக வல்லரசு என்ற ரீதியிலும் உபரியால் கொழுத்துப்போயுள்ள நாடுகள் என்ற ரீதியிலும் அவை கூறும் யாவும் சரி எனவும் இல்லை, ஏற்றுக்கொள்ளப்படப் போவதாகவுமில்லை.

இந்தவகையிலேயே அமெரிக்காவின் இராஜங்கத்திணைக்களத்தின பயங்கரவாத எதிர்ப்பு இணைப்பாளர் கொபர் பிளாக்கின்கூற்றுகளும் உள்ளன அதாவது அவரின் பார்வையில் கூறப்போனால், தமிழர் தரப்பு – அதாவது புலிகள் உரிமைக்காக மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவும் பயங்கரவாதச் செயல்களாகும். இதேவேளை சிறிலங்கா ஆட்சியாளர்கள் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் அவரால் பயங்கரவாதமோ, ஒடுக்குமுறை நடவடிக் கையாகவோ மதிப்பிடப்படவில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் அவர்கள் பிளாக்கின் இத்தகைய கருத்துக்கள் தொடர்பாக விடுத்துள்ள அறிக்கையில்இதனைத் தெளிவாகவே சுட்டிக்காட்டியுள்ளார். கொபர் பிளாக்கின் கருத்துக்கள் ஊகத்தின் அடிப்படையில் வெளியிடப்பட்டதொன்றென்பதை வலியுறுத்திக் கூறியுள்ள அவர் இலங்கை அரசு இனப்படுகொலைகள் மற்றும் இன ரீதியிலான தாக்குதல் மூலம் தமிழ் மக்களை அடக்கியாள முற்பட்டபோது தான் "இலங்கையின் வன் செயல்கள் ஆரம்பமாகின" எனச் சுட்டிக்காட்டியுள்ளதோடு,

"தமிழ் மக்களின் சட்டபூர்வ அரசியல் அபிலாசைகளை ஏற்றுக் கொள்ளத் தவறியதும் தமிழ் மக்களுக்கு ஏதிராக அரச பயங்கரவாதம் கட்டவிழ்த்து விடப்பட்டதும் தான் தமிழீழ விடுதலைப்புலிகளின் தோற்றத்திற்குக் காரணம்'' எனத் தெரிவித்துள்ளார். அத்தோடு, விடுதலைப்புலிகளுக்கு எதிரான அவரது மதிப்பீட்டைத் தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளமாட்டர்கள் எனவும் நடுநிலையான அணுகுமுறை ஒன்றைக்கடைப்பிடிக்கத் தவறுவது சமாதான நடைமுறைக்கு பாரிய தீங்கை விளைவிக்கும் என்பதையும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இன்றைய உலக ஒழுங்கில் பலம் பொருந்தியவர்களின் அபிப்பிராயம் என்பது முற்றிலும் அவர்களின் விருப்பு, வெறுப்பு அடிப்படையிலானதே. சிறப்பாகக் கூறுவதானால் அவர்களின் நலன் சார்ந்தாகவே இருக்கும். ஆனால் அவர்கள் பலம் பொருந்தியவர்களாகவும், அதிகாரம் மிக்கவர்களாகவும் இருப்பதன் காரணமாக பலர் அவர்களை அனுசரித்துப் போக வேண்டியதான நிலையிலும் நிர்ப்பந்தத்திலும் உள்ளனர்.

இவர்கள் தமது பலத்தையும், அதிகாரத்தையும் பல வேளைகளில் நடு நிலைக்கு மாறான விதத்திலும், நீதியற்ற விதத்திலும் பிரயோகிக்க முனைகின்றனர். எடுத்துக்காட்டாக அவர்களின் ஆதரவு பெற்ற அரசுகள் அடக்குமுறைகளைப் பிரயோகிக்கும் போதோ இனஅழிப்பில் ஈடுபடும் போதோ, அவற்றை அவை கண்டுகொள்வதாக இல்லை. மாறாக நாட்டின் பாதுகாப்பு என்ற ரீதியில் அவற்றிக்கு ஆதரவு வழங்குகின்றனர்.

மறுபுறத்தில் ஒடுக்கப்படும் இனமென்பது தமது உரிமைக்காக ஆயுதம் தாங்கிப் போராடினாலோ,அடித்தவர்களுக்குத் திருப்பி அடித்தாலோ இதனைப் பயங்கரவாதம் என முத்திரை குத்திவிடமுனைகின்றனர். இதற்கு எதிராக சர்வதேச ரீதியில் தமக்குள்ள பலத்தினைப் பிரயோகிக்க முற்படுகின்றனர்.

இதேவேளை இப்பலம் பொருந்திய அரசுகள் குறிப்பிடுவது போன்ற கண்மூடித்தனமான பயங்கரவாதச் செயல் முறைகள் உலகில் சில பகுதிகளில் இடம் பெறாமலும் இல்லை. ஆனால் அவை தார்மீக ரீதியிலானவையாகவோ நியாயப்பாடானவையாகவோ இல்லை என்பதை இலகுவிலேயே புரிந்து கொள்ள முடியும். எடுத்துக்காட்டாகப் போதைப்பொருள் கடத்தல் அப்பாவி மக்களைப் பணயக் கைதிகளாகப் பிடித்தல் போன்றவற்றைச் சுட்டிக் காட்ட முடியும்.

ஆனால் தார்மீக ரீதியிலும் நியாயமானதும், நீதியான போராட்டங்களை ஏதோ ஒரு விதத்தில் பலவீனப்படுத்தவோ அழித்தொழிக்கவோ, மேற்கொள்ளப்படும் முயற்ச்சிகள், அவற்றிற்கு வழங்கப்படும் உதவிகள் நடுநிலைமையானதும், நீதியான செயற்பாட்டைக் கொண்டதாகவும் இருக்க மாட்டாது. இந்த வகையிலேயே தமிழ்மக்களின் உரிமைப் போராட்டத்திற்கு எதிரான செயற்பாடும் கொள்ளத்தக்கதாகும்.

அத்தோடு நடுநிலையானதும், நீதியானதுமானதொரு தீர்வை வழங்காது அதனை நிர்ப்பந்தித்து ஏற்றுக்கொள்ள வைத்தல் என்பது நடைமுறைச் சாத்தியப்பாடானதோ, பிரச்சினைக்குத் தீர்வாகவோ அமையக் கூடியதல்ல. ஏனெனில் உரிமைக்காகப் போராடும் எந்தவொரு சக்தியும் தமது உரிமைகளை விட்டுக் கொடுத்துப் பேரம் பேசுவதற்கோ, நிர்ப் பந்தத்திற்கு உட்பட்டு போராட்டத்தைக் கைவிட்டுவிடவோ போவ தில்லை.

# சனாதிபதியின் ஆலோசனைச் சபைகுறித்து
# ரணிலுக்கு எழுத்துமூல தகவல் வழங்க முடிவு

சமாதான பேச்சுவார்த்தைகள் தொடர்பாக சனாதிபதியினால் முன்மொழியப்பட்டுள்ள ஆலோசனை சபை சம்பந்தமாக சனாதிபதி விரைவில் எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எழுத்துமூல தகவல்களை வழங்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதில் குறிபிட்ட சபையின் செயற்பாடுகள் சம்பந்தமான அனைத்து விடயங்களும் தெரியப்படுத்தப்படும் என சனாதிபதி தரப்பு தெரிவித்துள்ளது. இந்தத் தகவல்கள் ஏனைய அரசியல் கட்சிகளுக்கும் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் சமாதான பேச்சுவார்த்தைகளை முன்கொண்டு செல்லும் வகையில் இந்த ஆலோசனை சபையே முக்கிய பங்கை வகிக்கவுள்ளதாக சனாதிபதி தெரிவித்துள்ள நிலையில் இது தொடர்பில் சனாதிபதியின் எழுத்து மூல தகவல் கிடைத்ததும் தாம் கருத்து கூறப்போவதாக ஐக்கிய தேசியகட்சி தெரிவித்துள்ளது. இதற்காக மீண்டும் ஒரு முறை அந்த கட்சியின் அரசியல் பீடம் எதிர்வரும் திங்கட்கிழமை கூடவுள்ளது. இதேவேளை இந்த ஆலோசனை திட்டத்தை ஆரம்பத்திலேயே தமிழரசுக்கட்சி நிராகரித்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது (32)

# அரசின் சமாதான நடவடிக்கைகள் குறித்து வெளிநாட்டு தூதுவர்களுக்கு விளக்கம்

அரசாங்கத்தின் சமாதான முனைப்புகள் தொடர்பாக வெளிநாட்டுத் தூதரகங்களுக்கும் உயர்ஸ்தானிகராலயங்களுக்கும் விளக்கும் ஏற்பாடுகளை வெளிநாட்டமைச்சு மேற்கொண்டு வருவதாக அரசாங்கம் கூறுகிறது. இதனை செயற்படுத்தும் பொறுப்பு பிரதி வெளியுறவு அமைச்சர் விஸ்வ வர்ணபாலவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. தமிழ்த் தேசிய கூட்மைப்பினர் ஊடாக தமிழீழ விடுதலைப் புலிகள் வெளிநாட்டு தூதரகங்களுக்கும் உயர்ஸ்தானிகராலயங்களுக்கும் விளக்கமளிக்கும் முனைப்புகளுக்கு எதிராகவே அந்த ஏற்பாட்டை அரசாங்கம் மேற்கொண்டுள்ளது. (32)

## நாட்டின் பாதுகாப்பு,எதிர்காலத்தை பயங்கரவாதிகளுக்கு தாரைவார்க்க மாட்டோம்

### –சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு-கிழக்குப் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கு ஏனைய அரசியல் கட்சிகளின் ஒத்துழைப்பைப் பெறவுள்ளதாக சனாதிபதி தெரிவித்துள்ளார்.இந்த நாட்டின் பாதுகாப்பையும், எதிர்காலத்தையும் பயங்கரவாதிகளுக்குத் தாரைவார்க்க மாட்டோம்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு கண்டு யுத்தத்தை முடிவிற்குக் கொண்டு வருவது அவசியம் எனவும் சனாதிபதி கூறியுள்ளார்.

# வருடத்தில் மூன்றில் ஒருபங்கு நாட்கள் இலங்கை அரச ஊழியருக்கு விடுமுறை

### அமைச்சர் அமரசிறி தொடங்கொட

(கொழும்பு)

இலங்கையிலேயே அரச சேவையில் உள்ளவர்களுக்கு அதிக விடுமுறை தினங்கள் இருப்பதாக பொதுநிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் அமரசிறி தொடங்கொட தெரிவித்தார். அரசாங்க பொதுநிர்வாக அமைச்சில் தகவல் தொழில்நுட்பம் தொடர்பான நிகழ்ச்சித் திட்டம்ஒன்றை உத்தியோக பூர்வமாக ஆரம்பித்துவைத்து உரையாற்றும போதே அவர் இவ்வாறு கூறினார். வருடத்தில் முன்நூற்றிஅறுபத் தைந்து நாட்களில் மூன்றில ஒருபங்கு விடுமுறை தினமாக உள்ளது. இது நாட்டின் அபிவிருத்தி நடவடிக்கைகளில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது என்றார்அவர்.

# நிரந்தர நியமனம்கோரி போறாட்டம் நடத்த ஆங்கில ஆசிரியர் சங்கம் திட்டம்

பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள தமக்கு நிரந்தர நியமனம் கோரி தொடர் போராட்டங்களை நடத்த ஆலோசித்து வருவதாகத் தெரியவருகிறது.

இதுதொடர்பாக வடகிழக்கு மாகாண பகுதிநேர ஆங்கில ஆசிரியர் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தற்போதைய அரசினால் வழங்கப்பட்டுவரும் பல்வேறுபட்ட ஆசிரியர் நியமனங்களில் பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள் தொடர்ந்தும் திட்டமிட்டுப் புறக்கணிக்கப்படுவது யாவரும் அறிந்ததே. பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களினால் கடந்த காலங்களில் முன்னெடுக்கப்பட்ட போராட்டங்கள் அப்போதைய அரசின் பொய்யான வாக்குறுதிகளால் கைவிடப்பட்டிருந்தது. கடந்த 10 வருடங்களாக பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களாகக் கடமையாற்றி வருபவர்களின் நிரந்தர நியமனக் கோரிக்கைக்குச் செவிசாய்க்காது மேலும் புதிதாக இவ்வடிப்படையில் ஆட்களைச் சேர்த்துத் திட்டமிட்டு இளம் சமுதாயத்தை பாழடிக்கின்ற ஒரு செயலாகவும் எமது முன்னைய போராட்டங்களைக் கொச்சைப்படுத்துவதாகவும் கருதுகிறோம்.

நிரந்தர ஆசிரியர் நியமனத்திற்குத் தேவையான அனைத்துத் தகைமைகளையும் கொண்டிருப்பவர்களே முற்றுமுழுதாக இவ்வாறான புறக்கணிப்புக்கு ஆளாகியிருக்கிறார்கள். பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கும் பொருட்டு இதே அரசினால் கடந்த 2001, 2002 ஆகிய ஆண்டுகளில் இருதடவைகள் வவுனியாவிலும், பின்னர் அந்தந்த மாவட்டங்களிலும் நேர்முகப் பரீட்சைகள் நடாத்தப்பட்டன. ஆயினும் இது தொடர்பான முடிவேதும் இன்றுவரை வெளியிடப்படவில்லை என்பது எமக்கு மிகுந்த வேதனையளிக்கிறது. அரசின் இவ்வாறான நடவடிக்கைகளால் வடக்குக்கிழக் கில் ஏற்பட்டுள்ள கடும் ஆங்கிலஆசிரியர் பற்றாக்குறை மாணவர்களின் பெறுபேறுகளில் கடந்த காலங்களில் பாரிய பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது.எனவே இது தொடர்பில் எதிர்வரும் நாட்களில் வடக்கு கிழக்கு தழுவிய பிரதேசங்களில் எமது சங்கம் முன்னெடுக்கவுள்ள முனைப்பான தொடர் போராட்டத்திற்கு பாராளுமன்ற உறுப்பினர்கள், கல்விச் சமூகம் மற்றும் சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினரும் தங்கள் பூரண ஆதரவை வழங்கி எமது போராட்டம் வெற்றிபெற ஒத்துழைக்குமாறு வேண்டி நிற்கிறோம்.

### அவசர கலந்துரையாடல்

பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களின் நிரந்தர நியமனம் தொடர்பாக அவசரகலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்ள வேண்டியுள்ளதால் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங் களைச் சேர்ந்த அனைத்துப்பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களும் தங்களுடைய சுயவிபரங்களுடன் எதிர்வரும் 17.09.2004 வெள்ளிக்கிழமை காலை 10.மணிக்கு கிளிநொச்சி மாவட்ட பல்கலைக்கழக புகுமுக மாணவர் ஒன்றியத்திற்குச் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.


# முன்னரங்க காவல் நிலைகளில் இருந்து நாம் பின்வாங்கத் தேவையில்லை

### இராணுவப் பேச்சாளர் சுமேதபெரேரா

நாகர்கோவிலின் முன்னரங்க காவல் நிலைகளில் இருந்து தாம் பின்வாங்கத் தேவையில்லை என சிறிலங்காவின் படைத்துறைப் பேச்சாளர் சுமேத பேரேரா தெரிவித்துள்ளார்.போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு முன்னகர்த்தப்பட்டுள்ள முன்னரங்க நிலைகளை இரண்டு தரப்பும் பின்னோக்கி நகர்த்த வேண்டும் எனக் கேட்டிருந்தது. இதன்போது கருத்து வெளியிட்டுள்ள சுமேத பெரேரா, போர்நிறுத்த உடன்பாட்டின் பின்னர் சிறிலங்காப் படையினர் தமது நிலைகளை முன்னோக்கி நகர்த்தாமையால் தாம் தமது நிலைகளை பின்னகர்த்த வேண்டிய அவசியம் இல்லை என்று தெரிவித்துள்ளார். (32)

## தென்னிலங்கைச் செய்தியாளருக்கு

# தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் செயற்றிட்டங்கள் குறித்து விளக்கம்



நேற்று முன்தினம் காலை 8.30 மணிக்கு தென்னிலங்கை செய்தியாளர்களுடனான சந்திப்பும், கருத்துப் பகிர்வும் தமிழர் புனர்வாழ்வுக்கழக நிறைவேற்றுப் பணிப்பாளர் திரு.கே.பி. றெஜி தலைமையில் நடைபெற்றது.

திருமதி. மாக்கிரட் பரராஜசிங்கம் அவர்கள் (தமிழர் புனர்வாழ்வுக்கழகம், அவுஸ்திரேலியா) தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் செயற்றிட்டங்கள் பற்றி வீடியோ படக்காட்சிகள் மூலம் விரிவாக விளக்கமளித்தார். சமூக பொருளாதார வங்கி மூலமாக மக்களுக்கு வழங்கப்பெறும் கடனுதவிகள், மற்றும் சிறுவர் நலத் திட்டங்கள், கண்ணிவெடி அகற்றும் பணியில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் பங்கு எத்தகையது. மக்கள் நலத் திட்டங்கள் என்பன பற்றி ஆங்கிலத்தில் திருமதி.மாக்கிரட் பரராஜசிங்கம் விளக்கமளித்தார்.

அதற்கு சிங்களமொழி மூலம் உடனுக்குடன் அவர்களுக்கு விளக்கமளிக்கப்பெற்றது.

இதற்குப் பின் நடந்த கருத்துப் பகிர்வில் தென்னிலங்கை செய்தியாளர்கள் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் செயற்திட்டங்கள் பெரும் வியப்பைத் தமக்களிப்பதாகவும், மேலும் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் செயற்பாடுகளை தென்னிலங்கை மக்கள் சரியாக புரிந்துகொள்வதற்கான வகையில் திட்டங்கள் பற்றிய செய்திகளை சிங்கள மொழியிலும் பிரசுரித்து ஆவன செய்யவேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்கள். திரு சந்துரு பரராஜசிங்கம் தமிழர் புனர்வாழ்வுக்கழக கொழும்பு கிளையின் பணிப்பாளர் கலந்துரையாடலில் அனுசரனையாக இருந்தார். (சோ,கு)

## காவல்துறை...

பெற்றுள்ளது.நீதி நிர்வாகத் துறை சார்பில் நீதி நிர்வாகத் துறைப் பொறுப்பாளர் பரா அவர்கள், தலைமை நீதியாளர் ஒப்பிலான், பிரதம செயலர் நிக்ஷன், சட்ட வாக்கப் பொறுப்பாளர் இசையமுதன், செய்தி நிருபர் யூட்.நிமலன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.இச்சந்திப்பின் போது தமிழீழ நீதி நிர்வாக துறையின் செயற்பாடுகள் பற்றி விளக்கப்பட்டது. ஊடகவியலாளர்களால் கேட்கப்பட்ட கேள்விக்கும், தமிழீழ நீதி நிர்வாகத்துறைப் பொறுப்பாளர் அவர்களால் பதிலளிக்கப்பட்டது அதன் பின் கிளி. இல் அமைந்துள்ள நீதி மன்ற வளாகத்துக்குச் சென்று மாவட்ட நீதிமன்றம், மேல் முறையீட்டு நீதி மன்றங்களை பார்வையிட்டுச் சென்றுள்ளனர்.

தமிழீழக் காவல்துறைப் பொறுப்பாளர் ப.நடேசன் அவர்களுடனான சந்திப்பு நேற்று மாலை 3.00 மணியளவில் கிளிநொச்சியில் அமைந்துள்ள காவல்துறை நடுவப் பணியகத்தில் இச்சந்திப்பு நடைபெற்றது. இச்சந்திப்பில் தமிழீழக் காவல்துறை அமைப்பின் நோக்கங்கள் அதன் செயற்பாடுகள் பற்றியும் ஊடகவியலாளர்களுக்கு ப.நடேசன் அவர்கள் விளக்கிக்கூறியுள்ளார். (சோ,கு)

## தமிழீழ....

கண்காட்சி, மாதிரி இராணு வத்தளம், மாதிரிச் சண்டைக்காட்சிகள் அத்துடன் 2ஆம் லெப் மாலதியின் நினைவுக் கேடயத்திற்கான உதைபந்தாட்டப் போட்டிகளும் நடைபெறவுள்ளது. இதில் தமிழீழ தாயகத்தின் அனைத்து மாவட்ட மகளிர் உதைபந்தாட்ட அணிகளும் கலந்து கொள்ளவுள்ளன. மேலும் விசேட கலை நிகழ்வுகள் தமிழீழத்தின் முன்னணி இசைக்கலைஞர்களும் போராளிக் கலைஞர்களும் இணைந்து வழங்குகின்ற இசை நிகழ்வுகள் விடுதலைப்புலிகளின் ஏனைய முன்னணித் தாக்குதல் அணிகளும் கலந்து சிறப்பிக்கும் விசேட நிகழ்வுகள் பல கிளிநொச்சி மத்திய மைதானத்தில் ஒக்டோபர் 6 ஆம் திகதி தொடக்கம் 10 திகதி வரை இடம்பெறவுள்ளது.

# சில இனவாதப்பிக்குகளின் கருத்துகளை ஒட்டுமொத்த பிக்குகளின் கருத்தாக மாட்டாது

## புலிகளுடனான சந்திப்பின்பின் பதுளைமாவட்ட பிக்கு கருத்து

தென்னிலங்கையிலுள்ள சில பௌத்த பிக்குமாரிற்கு இனவாதம் எனும் நோய் தொற்றியுள்ளது. இப்படிப்பட்ட இனவாதத்தைக் கக்கும் பௌத்த பிக்குகளினதும் கருத்துக்களையே. ஒட்டுமொத்த பௌத்த பிக்குகளின் கருத்தாக அனைத்துத் தரப்புகளும் நினைக்கின்றன. ஆனால் அது முழுமையாக தவறானது. ஒரு சிறு பௌத்த பிக்குகளின் பிரிவினரே இனவாதத்தைத் தூண்டிவிட தற்போது முற்பட்டுள்ளனர். ஆனால் பௌத்த பிக்குகளில் பெரும்பான்மையினர் மீண்டும் ஒரு யுத்தம் வேண்டாமென அரசை வலியுறுத்தி வருகின்றனர். அதையே நாமும் விடுதலைப்புலிகளாகிய உங்களிடமும் முன்வைக்கின்றோம் என்றனர் பதுளை மாவட்ட பௌத்த பிக்குகள்.

குடாநாட்டில் உண்மை நிலையினை அறிந்துகொள்வதற்காக வென விஜயம் செய்த பதுளை மாவட்ட பௌத்தபிக்குகள் குழுவொன்று நேற்று நண்பகல் கொக்குவில் பொற்பதி வீதியிலுள்ள விடுதலைப்புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல்துறை தலைமையகத்திற்கு விஜயம் செய்திருந்தனர்.

விடுதலைப்புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் துறை தலைமைச்செயலகத்தினில் இடம்பெற்ற சந்திப்பில் துணை அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.செம்மணன், யாழ். மாவட்ட மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் செல்வி. கலைவிழி மற்றும் தொழிற்சங்கங்களின் இணைப்பாளர் ச.இமையவன் ஆகியோர் கலந்து கொண்டனர். (27)

## தியாகி...

9.55 மணிக்கு பொதுச் சுடரேற்றி தேசியக்கொடியேற்றலுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகும்.

இதனையடுத்து தியாகி லெப்.கேணல் திலீபன் திருவுருவப் படத்திற்கு சுடரேற்றி மாலையிட்டு, மலர்தூவி அகவணக்கம் செலுத்தப்படும் நினைவுரைகளும் இடம் பெறவுள்ளன.

## இந்திய....

நடவடிக்கைகளுக்கு அமெரிக்கா நிதியுதவி வழங்கியுள்ளதுடன் இந்தியாவின் கடற்படைத்தளபதி மற்றும அமெரிக்க இராணுவத்தளபதி ஆகியோர் அரசின் படைபலத்தினை அதிகரிக்கச் செய்யும் இராணுவ ஆலோசனைகளையும், புலனாய்வு உதவிகளையும் வழங்கி வருகின்றனர்.

இது சமாதான முயற்சிகளை குழப்பும் விதமாக அமைந்துள்ளதாகச் சுட்டிக்காட்டி மேற்படி ஆட்சேபத்தை வெளியிட்டுள்ள தமிழ்த் தேசிய விழிப்புணர்வுக் கழகம் மற்றும் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை என்பன.

அமெரிக்கா, இந்தியா என்பன தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் இடைக் காலத் தன்னாட்சி அதிகார சபையினை தமிழ்த் தரப்பிடம் வழங்க உரியஆதரவினை வழங்க வேண்டுமென வும் அறிக்கைகளையும் வெளியிட்டுள்ளனர். (33)

## வீரச்சாவு...

8 ஆம் வட்டாரம் புங்குடுதீவு, யாழ்ப்பாணம். த.மு.இல 38 ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம்,எனும் போராளியே வீரச்சாவடைந்தவராவார்.

இவருக்கு தமிழீழ விடுதலைப புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

## கனடா...

சிறிலங்கா ஐக்கிய தேசிய அமைப்பு என்று தம்மை அடையாளம் காட்டிக்கொண்டுள்ள இந்த அமைப்பின் தலைவர் மஹிந்த குணசேகர கையெழுத்திட்டுள்ள இக்கடிதத்தில்தான் 2002 ஆம் ஆண்டுசெப்ரெம்பர்மாதம்கனேடிய அரசிற்கு எழுதிய கடிதத்தை மீண்டும் ஞாபகமூட்டுவதாகவும், அந்தக் கடிதத்தில் ஏற்கனவே குறிப்பிட்டுள்ளதுபோன்று விடுதலைப் புலிகள் தங்களது ஆயுதப்போராட்டத்திற்குப் பணம் சேர்க்கவே இந்த நிகழ்வு நடைபெற ஏற்பாடாகியுள்ளதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

## நாங்கள்...

அவரை அச்சம் காரணமாக இங்கு செல்ல அனுமதிக்கவில்லையென குறிப்பிடப்பட்டது.

இதனை நினைத்து நாங்கள் வேதனை அடைகின்றோம். தமிழ் மக்களோ, தமிழீழ விடுதலைப்புலிகளோ சாதாரண சிங்கள மக்களுக்கு எதிரானவர்கள் அல்ல. அவர்களையும் எங்களது சகோதர மக்களாகத் தான் நாங்கள் நேசிக்கின்றோம், பார்க்கின்றோம். அந்த வகையில் தெற்கிலே சிங்கள மக்கள் மத்தியிலே உருவாக்கப்பட்டிருக்கின்ற இனவாத குரோத உணர்வு எவ்வளவு தூரம் வலுவடைந்துள்ளதென்பதை நினைத்து நாங்கள் மிகுந்த வேதனை அடைகின்றோம்.

நீங்கள் இந்தப் பயணத்தின் முடிவில் சிங்கள மக்களுக்குத் தெளிவாகவும், உறுதியாகவும் எங்களது செய்தியை எடுத்துச் சொல்ல வேண்டும். நாங்களும் சாதாரணமான மக்கள் சிங்கள மக்கள் தமது தேசத்தில் எப்படி நிறைவோடும், மகிழ்வோடும் உரிமையோடும், கௌரவத்தோடும், வாழுகின்றார்களோ அந்த மக்கள் வாழ்கின்ற அதே உரிமையை பெற்றுக் கொள்வதற்காக போராடுகின்ற விடுதலை அமைப்பும், மக்களும் என்ற ரீதியில் எங்களை சிங்கள தேசமும், அந்த மக்களும் பார்க்க வேண்டும்.

அதேவேளை, எங்களது கவலைகளையும், கரிசனைகளையும் உங்களுக்கு எடுத்துச் சொல்வது பொருத்தமாக இருக்கும் என நினைக்கின்றேன். தெற்கிலே இருந்து வருகின்ற சிங்கள, ஆங்கில ஊடகங்களிலே விடுதலைப்புலிகள் தொடர்பாகவும், விடுதலைப்புலிகளின் செயற்பாடுகள் தொடர்பாகவும், தமிழ் மக்களுடைய கோரிக்கைகள் தொடர்பாகவும் எழுதப்படுகின்ற செய்திகள், கட்டுரைகள் அனைத்துமே உண்மைக்குப் புறம்பானதும், தமிழ் விரோதப் போக்குக் கொண்டதும், பல ஊகங்கள் அடிப்படையில் எழுதப்பட்டு உண்மையிலே சிங்கள மக்கள் மத்தியிலே ஒரு தவறான கருத்து உருவாக்கும்போக்கிலே வருவதை நினைத்து நாங்கள மிகுந்த வேதனையையும், கவலையையும் அடைந்திருக்கின்றோம். உண்மையிலேயே தேசிய சமாதானப் பேரவை உங்களது வருகை சம்பந்தமாக அறிவித்த பொழுது நாங்கள் மிகவும் மகிழ்ச்சியடைந்தோம். வரவேற்றோம். எவ்வளவு வேலைப்பளுக் கள் இருந்தாலும் இதற்கான நேரத்தை ஒதுக்கி உங்களோடு பேச வேண்டுமென ஆர்வப்பட்டோம். அதற்குக் காரணம் எங் களைப் பற்றிப்புரிந்து கொண்டு எழுதுபவர் களைச் சந்திப்பதைவிட இங்குள்ள பிரச்சினைகளை, எமது மக்களின் பிரச்சினைகளை சரியாகப் புரிந்து கொள்ளாது பிழையான கருத்துக்களை வைத்திருப்பவர்களை நாங்கள் சந்தித்து எங்களுடைய நிலைப்பாடுகளை விளக்குவதற்கூடாக சிங்கள மக்களுக்கு நாங்கள் சரி யான செய்தியைக் கொண்டு செல்லலாம். உங்கள் மத்தியிலேயும் எங்களைப் பற்றிய சரியான, உண்மையான நிலைப்பாடுகளை எடுத்துச் சொல்லலாம் என்ற வகையில் இந்தச் சந்திப்பை நாங்கள் மிகவும் வரவேற்றோம். இச்சந்திப்பிற்கு நாங்கள் மிகவும் முக்கியத்துவத்தைக் கொடுத்தோம்.

நாங்கள் ஒரு வரலாற்று அனுபவத்தையும் உங்களோடு பகிர்ந்து கொள்வது பொருத்தமாக இருக்கும் என நினைக்கின்றேன். உண்மையிலேயே சாதாரண சிங்கள மக்கள் மத்தியிலே இன விரோதப் போக்கோ, தமிழர் விரோதப் போக்கோ உருவாகவில்லை. ஆட்சிப் பீடத்திலே உள்ள அரசியல் தலைமைகள் காலத்துக்குக் காலம் இனவாத அரசியலை நடாத்தி ஒரு யுத்த மூலம் அரசியலை திணித்து அதற்கூடாக ஆட்சியதிகாரங்களை தொடர்ச்சியாகப் பேணிக்கொள்வதற்கான ஒரு வழி முறையாகவே இந்த இனவாத குரோத உணர்வுகளை வளர்த்து சென்றிருக்கின்றன என்பது தான் இந்த ஆரசியல் வரலாற்றுப் போக்கில் நாங்கள் கண்டறிந்த உண்மை. அதை நாங்கள் சாதாரண சிங்கள மக்கள் மீது சுமத்தவிரும்பவில்லை. இது முழுக்க முழுக்க அங்கே ஆட்சி அதிகாரத்திற்காகத் தொடர்ந்து போட்டி போட்டுக் கொண்டிருக்கின்ற அரசியல்வாதிகளின் செயற்பாடாகத் தான் நாங்கள் பார்க்கின்றோம். ஏனெனில், சாதாரண சிங்கள மக்கள் பிழையாக வழி நடத்தப்பட்டார்களேயொழிய அவர்கள் மத்தியில் இனவிரோதப் போக்கோ தமிழர் விரோதப் போக்கோ, நிச்சயமாக இல்லை யென்றுதான் நாங்கள் கருதுகின்றோம். ஏனெனில், அண்மைக்காலங்களில் ஏற்பட்ட மாற்றங்கள் குறிப்பாக, 2001ஆம் ஆண்டு தேர்தலிலே இந்த யுத்தத்தின் கொடூரங்கள், யுத்தத்தால் ஏற்பட்டவிளைவுகள் யார் யாரைப் பாதிக்கின்றதென்ற உண்மை நிலையை உணர்ந்த போது அந்த மக்கள் சமாதானத்திற்காக, ஒரு வலுவான ஆணையை, வெளிப்பாட்டை காட்டியிருந்தார்கள். இதை வைத்து சிங்கள மக்கள் உண்மையிலேயே சமாதானத்தையும், நீதியையும் நியாயத் தையும் விரும்புகிறார்கள் என்பதை நாங்கள் புரிந்து கொண்டோம். துர்அதிர்ஷ்டவசமாக எங்களுடைய எதிர்பார்ப்புக்கள் நம்பிக்கை கள் எல்லாம் சீர்குலைந்து இரண்டரை வருட காலத்துக்குள் இவைகள் சீர்குலைக்கப்பட்டு மீண்டும் இங்கு ஒரு இனவாத கூச்சல்களும் குழப்பங்களும் ஏற்படுத்தப்பட்டு சிங்கள மக்கள் மத்தியில் பிழையான செய்திகளைக் கொடுத்து அந்த மக்களை பிழையாக வழி நடத்திச் செல்கின்ற சக்திகள் மீண்டும் வலுப்பெற்று அங்கே செயற்பட்டுக் கொண்டிருப்பதும். இன்றொரு யுத்தத்தை நோக்கி இந்தச் சமாதான சூழலை அழுத்தி தள்ளுகின்ற நிலைமையும் தோன்றியிருப்பது எங்கள் எல்லோருக்கும் வேதனையைத் தருகின்ற ஒரு செய்தியாக இன்று அமைந்துள்ளது. எனவே, நீங்கள் எமது உண்மை நிலைமைகளை தென்பகுதி மக்களுக்கு எடுத்துச் சொல்வதனூடாக அங்கு நிலைமைகளை குழப்பி அரசியல் இலாபம்தேட முனையும் சக்திகளுக்கு சரியான சாட்டை அடியை கொடுத்து மீண்டுமிந்த சமாதான வழி முறைக்குள் ஆட்சியதிகாரத்திலிருப்பவர்களைக் கொண்டு வருவதற்கான ஒரு முயற்சியாக உங்களின் கருத்து வெளிப்பாடுகள் அமையுமென நான் முழுமையாக நம்புகின்றேன். இந்த வேளையிலே நான் ஒன்றை நினைவுபடுத்த விரும்புகின்றேன். நாங்கள் இன்று இருக்கும் இந்த கிளிநொச்சியின் மையப்பகுதி கிளிநொச்சி நகர்ப் பகுதி முழுவதுமே ஒரு காலத்திலே சிறிலங்கா இராணுவத்தால் முழு அளவில் ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசம் இலட்சம், வரையான மகள் இங்கிருந்து விரட்டப்பட்டு காடுகளுக்குள்ளே பெரும் நெருக்கடி களைச் சந்தித்து வாழ்ந்தார்கள். இதேவேளை, இங்கு ஆக்கிரமித்த இராணுவம் இதை வழி நடத்திய அரசாங்கம் சாதாரண சிங்கள இளைஞர்களைக் கொண்டுவந்து ஆயிரக்கணக்கில் பலி கொடுத்தது. இதனால், என்ன நன்மை விளைந்ததென நீங்கள் சிங்கள மக்களிடம் கேட்க வேண்டும். இங்கிருந்து விரட்டப்பட்டு காடுகளில் வாழ்ந்த மக்கள் இங்கு வந்து தமது காணிகளில் வளங்களைப்பெற வந்த 300 வரையான மக்கள் காணாமற்போனார்கள். இன்று மீளக்குடியேறும் மக்கள் தமது உறவுகளின் எலும்புக்கூடுகளைக் கண்டெடுத்து வருகின்றார்கள். அவை சாட்சியங்களாக வைக்கப்பட்டுள்ளன. இது இந்த மக்களின் யுத்த கொடூரத்தை உணர வைக்கின்றன. சிங்களப் பிரதேசங்களில் வாழும் மக்களை ஒரு இராணுவம் வந்து விரட்டி ஆக்கிரமித்தால் அவர்கள் என்ன செய்வார்கள் என அவர்களை கேட்பதனூடாக எமது நிலைமையைப் புரிந்து கொள்ளக் கூடியதாக இருக்கும். எங்களுடைய பிரதேசத்துக்குள் தன்னாட்சி உரிமையின் அடிப்படையில் கட்டமைப்புக்களை நிறுவி இந்த மக்களுக்கு எவ்வளவு தூரம் ஒரு நிறைவான, சுமுகமான நிலையை ஏற் படுத்திக் கொடுத்திருக் கின்றோம். மக்கள் எவ்வளவு தூரம் அதனோடு பங்களிப்பைச் செலுத்தி நிறைவாக வாழ்கின்றார்கள் என்பதை நீங்கள் இந்தப் பிரதேசத்திற்கு வந்து உண்மை நிலைகளை அறிவதனூடாக விளங்கிக்கொண்டிருப்பீர்களென நான் நினைக்கின்றேன் என்றார். (சோ,கு)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 15ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.